௫௨ திருப்பெருந்துறைச்சருக்கம்.

நற்றவர்வருத்தங்காணநாணமுற்றொளிப்பான்போன்று ... *
பொற்றடந்தேரின்வெய்யோன்போய்க்குடபான்மறைந்தான்.

(இ-ள்) சற்றாயினும் மனந்தளர்ச்சியில்லாத தன்மையையுடையவரா யித் திருவாதவூரரானவர் அந்தத் தண்டற்காரர் செலுத்தப்போய் வலிய சிறைச்சாலையையுடைய நல்ல தவத்தையுடைய இவரது வருத்தத்தைப் பார்க்க நாணமடைந்து ஒளிப்பவனைப்போலப் பொன்மயமாகிய விசாலம்பொருந்திய தேரினின்றும் சூரியன்போய் மேற்குத்திசையின் கண்ணே மறைந்தானென்றவாறு. (௱௨௰)

கள்ளுலாமிதழிமாலைகவின்பெறமுடித்தவேணி... ... ... *
வள்ளலாரேவச்சென்றவழுதிமேல்வெகுட்சிகொண்டு...... *
வெள்ளைவான்பிறைப்பற்றோன்றவிழுங்கவங்காந்தபேயின் *
கொள்ளிவாயனையவண்ணக்கொண்டதுசெக்கர்வானம் ... *

(இ-ள்) தேனுலாவிய கொன்றைமாலிகையை அழகுபெறமுடித்த சடையையுடைய பரமசிவன் ஏவப்போய் பாண்டியன்மேற் கோபங் கொண்டு வெளுத்த மேலாகிய பிறைப்பல்லானது தோன்றவிழுங்க வாயைத்திறந்த கொள்ளிவாய்ப் பிசாசம்போல வடிவுகொண்டது செக்கர் வானமென்றவாறு. (௱௨௧)

தெண்டிரையுலகினல்ல திறத்தவர்க்குற்றதீங்கு......... .. *
கண்டுளசிறியோர்போலநகைத்தனகவின்கொண்முல்லை...*
யொண்டமிழ்வாதவூரர்க்குற்றதையுணர்ந்தேதுன்பங் ... *
கொண்டவரிதயம்போலக்குவிந்தனகமலமெல்லாம்... ... *

(இ-ள்) தெளிந்த அலைநீர்சூழ்ந்த உலகத்திலே நல்லயோக்கியர்களுக் குச் சம்பவித்த தீங்கைப்பார்த்த சிறியவர்கள்போல வாசனைகொண்ட முல்லைச்செடிகள் சிரித்தன, ஒள்ளிய தமிழ்வேதம்பாடுகின்ற மாணிக்க வாசகருக்குவந்த தீங்குதெரிந்து துன்பங்கொண்ட பெரியோர்கள் சிந் தைபோலக்குவிந்தன, தாமரைமலர்களெல்லாமென்றவாறு. (௱௨௨)

தென்னவன்வைத்தகாவற்சிறையினிலுறையுந்தெய்வ......*
மன்னவரொருவர்காணினுணமுற்றயர்வாரென்றே........ *
யின்னல்கொண்மனத்தாள்போல விருட்கரங்கொண்டுகூடற்
பொன்னகருள்ளார்கண்கள்புதைத்தனள்கங்குல்மங்கை... *

(இ-ள்.) பாண்டியனால் வைக்கப்பட்ட சிறைச்சாலையிலேதங்கிய தெய் வத்தன்மையையுடைய திருவாதவூரர் ஒருவர்கண்டால்மனமழிவாரென்று துன்பங்கொண்ட மனமுடையவள்போல இருளாகிய கைகளாற்கொ

ண்டு அழகிய மதுரைமாநகரிலுள்ளவர்கள் கண்களைப்புதைத்தனர்-இரா த்திரியாகிய பெண்ணென்றவாறு. (௱௨௩)

மன்பகைதுரப்பநிந்தமந்திரித்தலைவர்க்குண்டா........... *
மென்பதுமுளதோவந்தோ வென்செய்துமென்றிரங்கி.. *
யன்பனையகன்றநெஞ்சாலழலெழவுயிர்த்துமாழும் .. ...*
துன்புடைமடவார்போலத்துயின்றிலர்மதுரையுள்ளார்... *

(இ-ள்) பாண்டியனுடைய பகையை நீக்கிக் கொள்ளுந்தன்மை இந்த மந்திரிகளிலே முதன்மைபெற்ற திருவாதவூரருக்கு உண்டாமென்று சொல்வது முண்டோ? ஐயோ! இதற்கு நாமென்னசெய்வோமென்றிரங்கித் தலைவனைப்பிரிந்து ஆற்றாமையுள்ள மனத்தோடு அழலாகியபெருமூச்சுவிட்டு மயங்குகின்ற துன்பத்தையுடைய மகளிர்போல அன்றிரவில் நித்திரைசெய்திலர் - மதுரையிலுள்ளவர்களெல்லாம்-எ-று. (௱௨௪)

செம்மனப்புனிதர்க்குண்டாந்தீங்குதங்கிழமையாலே.....*
யைம்முகக்கடவுளீன்றவறுமுகற்குரைக்குமாபோல்... ... *
விம்முசெஞ்சூட்டுமுட்டாள்வியன்சிறைச்சேவலெல்லாந் *
தம்மனையிடங்கடோறுந்தழங்கினபுலரிக்காலை... ... .*

(இ-ள்.) நல்லமனத்தையுடைய பரிசுத்தரான திருவாதவூரருக்கு உண்டாகியதீங்கினைத் தங்களுக்கிருக்கின்றவுரிமையினாலே ஐந்துமுகத்தினையுடைய பரமசிவனீன்றருளிய ஆறுமுகசுவாமிக்குச் சொல்வதுபோலப் பருத்தசிவந்த உச்சிக்கொண்டையையும் முள்ளையுடைய காலையும் பெரியசிறைகளையுமுடைய சேவல்களெல்லாம் தங்கள்தங்கள் வீடுகள்தோறும் விடியற்காலத்தில் சத்தித்தனவென்றவாறு. (௱௨௫)

சிற்பரமுணர்ந்தஞானச்செந்தமிழோதுநீதிப்... .... *
பொற்பினையுடையமாரின்னல்பொறாது சென்றுரைப்பார்போல *
விற்பொலிசடிலஞ்சூலமேலவனாலவாயி.. ... .*
லற்புதன்கோயின்முன்றிலார்த்தனசங்கமெங்கும்............ ...*

(இ-ள்) பரமசிவனது யதார்த்தவடிவையறிந்து செவ்வியதமிழ்வேதமென்கிற ஞானநூலையோதும் நீதியையுடைய மாணிக்கவாசகரது துன்பத்தை பொறுக்கமாட்டாமற்போய்ச் சொல்லுகின்றவர்கள்போலப் பிரகாசம்பொருந்திய சடையையுடையவராயும் சூலாயுதத்தையுடையவராயும் திருவாலவாயிலெழுந்தருளியிருக்கின்ற சொக்கநாயகர் சந்நிதிக்குமுன்னே அனேகசங்கங்கள் முழங்கினவென்றவாறு. (௱௨௬)

எம்பிறைபரியிலேறுநாளிதோவென்றுபார்க்குஞ்......... .....*
செம்மலர்மடவாளிட்டதிலகசெந்தூரம்போல... .... *

௩௪ திருப்பெருந்துறைச்சருக்கம்.

வம்மலிமிசையேவையியாடகக்கிரிசூழ்போந்து ......*
மைம்மிகுகடன்மேல்வந்துமுளைந்ததுவாலைபானு ......*

(இ-ள்) எம்முடைய கடவுள் குதிரையிலேறிவருகின்ற நாளிதுதானென்று பார்க்கின்ற செந்தாமரைப்பூவில் வீற்றிருக்கப்பெற்ற திருமகளணிந்த சிந்தூரப் பொட்டுபோல மேற்குமலையில் அஸ்தமித்து மகமேருமலையைச் சுற்றிக்கொண்டுவந்து, கருமைமிகுந்த கீழ்க்கடலிலே உதயமானான் இளஞ்சூரியனென்றவாறு. (௱௨௭)

மண்கெழுசெங்கோல்வேந்தன்வைகறையெழுந்துநீராற் ... ...*
கண்கழலவிடக்கிமூழ்கிக்கண்ணுதற்பூசைசெய்து ......*
தண்ணிர்முத்தமாலைதரித்துநற்கலன்கடாங்கி ......*
விண்ணிவர்செம்பொற்கோயின்முகப்பினில்வீற்றிருந்தான் ....*

(இ-ள்) பூவுலகத்திற் செங்கோல்செலுத்துகின்ற பாண்டியன் விடியற்காலத்தில் நித்திரையையொழித்து கண்கால்முதலிய அவயவங்களைச்சுத்திசெய்து ஸ்நானஞ்செய்து சிவபூசைசெய்து குளிர்ச்சிபொருந்திய கிரணங்களையுடைய முத்துமாலைகளைத் தரித்துக்கொண்டு நல்லஆபரணங்களையணிந்துகொண்டு ஆகாசமளவிய செம்பொன்னினாற்செய்ததன்னுடைய அரண்மனைமுகப்பிலேவந்து வீற்றிருந்தானென்றவாறு. (௱௨௮)

வன்றிறலாளரெல்லாம்வாம்பரித்திரள்கள்கொள்வான் ... ...*
சென்றனரடியார்க்கீந்தசெம்பொருடாரீராகி ......*
வின்றுமைவருத்தஞ்செய்துமென்றெரிவெயிலினூடே .. ...*
நின்றிடுமென்னநின்றார்நீள்பெரும்புகழினிற்பார் ......*

(இ-ள்) வலிய சௌரியத்தையுடைய தண்டற்காரர்களெல்லாம் தாவுகின்ற குதிரைக்கூட்டங்கள் கொள்ளப்போய்ச் சிவனடியார்களுக்குக் கொடுத்துவிட்ட நல்லதிரவியத்தைத் தரமாட்டீராகில் இன்றைக்கு உம்மை வருத்தப்படுத்துவோமென்று எரிக்கின்ற வெயிலிலே நின்றிடுமென்று சொல்ல அப்படியே நின்றார் மிகுந்தபுகழில்நிற்பவராகிய திருவாதவூரரென்றவாறு. (௱௨௯)

அங்குநின்றிளைப்பார்தம்மையாண்டவாண்டகையையுன்னி .....*
யிங்குணர்ந்திலைகொல்லோவென்றுதம்மனத்தேசொல்லிச் ...*
சங்குவெண்குழையாய்மன்னன்றனக்குவாம்பரிகளீத ......*
னெங்கடாகுமென்றுநவின்றசொற்பொய்ம்மையாமோ ......*

(இ-ள்) அந்தவெயிலிலேநின்று இளைப்பாராகிய மாணிக்கவாசகர்தம்மையாண்ட குருவை நினைத்து இங்கேயெனக்கு நேரிட்டவருத்தத்தைத் தீர்த்தாயில்லையோவென்றும் வெள்ளியசங்கக்குழையையுடைய பரமசிவ

னே பாண்டியனுக்குத் தாவுகின்ற குதிரைகள்கொடுப்பது நம்முடைய கடனாகுமென்று சொன்னசொற் பொய்மையாமோ வென்றும் தம்முடைய மனதிற்சொல்லுவாரென்றவாறு. (௱௯௰)

ஊனுடம்புடையவாழ்க்கையொழித்துனக்கடிமையென்று *
மானிலம்புகலுமாறுவந்துனையடைந்தவன்றன்னை... ...... *
மீனவன்றன்பாற் மீளவிடுத்தனைவேலைநீரு... ....*
ளானபினந்நீராற்றுநீரெனவாவதுண்டோ......................*

(இ-ள்) மாமிசபிண்டமாகிய தேகவாழ்வைநீக்கி உனக்கு அடிமையானவனென்று பெரியவுலகத்தார் சொல்லும்படிவந்து உன்னையடுத்த அடியேனைப் பாண்டியனிடத்தில் மறுபடியும்விட்டாய் ஆற்றுநீர்சமுத்திரத்துடனே கலந்தபின்பு அக்கடல் நீராகுமேயல்லாமல் ஆற்றுநீராவதுண்டோவென்றவாறு. (௱௯௧)

அறத்தனிச்செல்விபாகவன்பிலேனின்பாலென்று...... ...*
வெறுத்தடிலடியேற்கிங்குவேறொருதுணையுமில்லை... ...*
செறுத்துயர்புரங்களெல்லாஞ்செற்றவரடியான்றன்னை... *
நிறுத்தினர்வெயிலிலென்றானின்புகழ்க்கேற்றமாமோ... *

(இ-ள்) முப்பத்திரண்டு தருமத்தையும் வளர்க்கின்ற ஒப்பற்ற உமாதேவியை ஒருபாகத்திலேவைத்த கடவுளே உம்மிடத்தில் அன்பிலேனென்று என்னை வெறுத்துவிட்டாய் அடியேனுக்கு இங்கே வேறொரு துணையுமுண்டோ பெரியதிரிபுரங்களைக்கோபித்து எரித்த சிவனுடைய அடியானை வெயிலிலே நிறுத்தினார்களென்றால்உம்முடைய கீர்த்திக்குப் பெருமையாகுமோவென்றவாறு. (௱௯௨)

வானநாடவர்க்குமேலோய்வந்துனக்கடிமையிப்போ......*
தானநானிடும்பையுற்றாலாருனக்கடிமையாவார்.. ....*
நானெனுமனத்தார்சொல்லுநல்லுரையன்றிநின்ற... ......*
வீனனுமொருவன்சொல்ல சேறுமோவுளத்திலென்றார்... *

(இ-ள்) தேவர்களுக்கு மேலானவரேவந்து உமக்கு இப்போது அடிமையான நான் துன்பப்பட்டால் ஆருனக்கு அடிமைப்படுவார்கள் யானென்னும் அகந்தையற்றநல்லமனத்தையுடையவர்கள்சொல்லுகின்ற நல்லசொல்லல்லாமல் ஈனனாகிய என்னுடைய சொல்லானது செவியிலேறுமோவென்றுசொன்னவாறு. (௱௯௩)

அவத்தொழில்புரியாமென்மையன்பருக்கன்புசெய்து... *
பவக்கடலிடைவிழாமற்பரிந்தருட்பார்வைநல்கித்........*

௫௬ திருப்பெருந்துறைச்சருக்கம்.

தவப்பெருவடிவங்கொண்டேதாளளித்தாளுமையர்...... ...*
செவிப்புலன்புகுந்ததன்பர்செப்பியமாற்றமெல்லாம்... *

(இ-ள்) அவத்தொழிலைச்செய்த மேன்மையையுடைய அன்பரிடத்திலே கிருபைசெய்து பிறவிக்கடலிடைவிழாமல் அன்புடனே கிருபாநோக்கமருளிக் குருமூர்த்தமாக வெழுந்தருளித் திருவடியைக் கொடுத்தருளுகின்ற பரமசிவனுடைய செவியினிடமாக நுழைந்தது திருவாதவூரர்சொல்லிய சொற்களெல்லாமென்றவாறு. (௱௯௪)

காம்படுதோளிபாகன் கண்ணுதலண்ணலன்பர்... ... *
தாம்படுதுயரமெண்ணி யத்துயர்தணிக்கவேண்டித் ...*
தேம்படுமலங்கன்மார்பித் தென்னவன்றனக்குவென்றி *
வாம்பரியளித்தல்சொல்வாம்வல்வினைப்பகையைவெல்லாம்*

(இ-ள்.) மூங்கிலினையொத்த தோளினையுடையஉமாதேவிபாகனாகியும் நெற்றிக்கண்ணையுடையவனாகியும் இருக்கின்ற பரமசிவன் தன்னுடைய அடியாராகிய திருவாதவூரர் படுகின்ற துயரத்தை நினைத்து அத்துயரத்தை நீக்கவேண்டி வாசனைபொருந்திய வேப்பமாலையணிந்த மார்பையுடைய பாண்டியனுக்கு வெற்றியையுடைய தாவுகின்ற குதிரையைக்கொடுத்த கதையைச்சொல்லித் தீவினைப்பகையை வெல்லுவாமென்றவாறு.

திருப்பெருந்துறைச்சருக்கம்
முற்றுப்பெற்றது. ஆக திருவிருத்தம்-௱௮௨.

குதிரையிட்ட சருக்கம்.

(வேறு.)

தந்தையென்பவர்மைந்தர்வாதைதவிர்ப்பதேகடனாதலா...*
லந்தமின்றியகாதலன்பரழுங்கல்கண்டபினரியெலாம்......*
வந்துவெம்பரியாகவும்பரிவீரர்வானவராகவுஞ்..... ......*
சிந்தைகொண்டனரந்தமால்விதிதேடுவார்மதிசூடுவார்... *

(இ-ள்) பிள்ளைக்கு வந்தவருத்தத்தை நீக்குவது பிதாக்களுக்குக் கடனாகையாலே முடிவில்லாத அன்பையுடையதிருவாதவூரர் வியசனப்படுவதைப் பார்த்தபின்பு நரிகளெல்லாம்வந்து வெவ்விய குதிரைகளாகவும் தேவர்கள் அந்தக் குதிரைகளைச் செலுத்துகின்ற ராவுத்தராகவும் மன

திரிவிடத்திலே நினைத்தார் அந்த மகாவிஷ்ணுவும் பிரமதேவனும்தேடி
வாரும் சந்திரனை முடியிற்றரிப்பவருமாகிய பரமசிவனென்றவாறு. (௧)

தேசிலாநரியத்துவத்து திரண்டுவெம்பரியானபின்... ...*
ஞசிலாவிமையோர்கடாமு மமைந்தசேவகராகினார்....... *
மாசிலாமணிமன்றராரிய வாசிவாணிபர்போலவே...... ...*
பேசிலாவுருமாறினார்மறை யிவுளியின்புறமேவினார்... .. *

(இ-ள்) அழகில்லாத நரிகள் வந்துவந்துகூடி வெவ்விய குதிரைகளானபின்பு குற்றமில்லாத தேவர்களும், அவைகளுக்கு ஏற்ற ராவுத்தராயினார்கள் களங்கமில்லாத அழகிய சபையினிடத்திலே நடனஞ்செய்கின்ற கடவுளானவர் ஆரியதேசத்துக் குதிரைவர்த்தகர்போல ஏசுதலில்லாத தம்முடைய உருவமாறினவராகி வேதக்குதிரையின்மே லேறிக்கொண்டாரென்றவாறு. (௨)

சேடுகொண்டுதிரண்டுவீர ரிரண்டுளாக்கர்சிறக்கவே ....*
பூடெழுந்துகளிம்பராங்கணு மும்பருங்கிளர்வெய்தவே *
கோடுடன்றுடிவிம்மநீடிய கூடல்சூழ்மதில்வாயிலவா.. ...*
யாடல்வெம்பரிகொண்டுவந்தன ராதியாருமைபாதியார் *

(இ-ள்) சவுக்குகள்கொண்டு குதிரைச்சேவகர் திரண்டு இரண்டுபக்கங்களிலுஞ் சிறப்பாகவீர அவ்விடத்திலே எழுகின்ற தூளியானது பூமியாகாசமெங்கும்பரக்க ஊதுகொம்பு உடுக்கைமுதலியவாத்தியங்களுஞ்சத்திக்க மதுரைமாநகரத்து நெடியமதில்வாயிலினிடத்தே ஆடுகின்ற வெவ்விய குதிரைகளைக்கொண்டுவந்தார் யாவர்க்குமுதல்வராகியும் உமாதேவியை யொருபாகத்திலுடையவராகியும் இருக்கின்ற கடவுளென்றவாறு. ()

அங்குநின்றவர்சென்றுநிம்ப வலங்கலானைவணங்கியே... ... ...*
யெங்கணுந்துகள்பொங்கிவிம்ம வெழுந்துகாகளமார்ப்பவே.. *
திங்கள்வெண்குடைமன்னவாரிய தேசவெம்பரியின்றுநற்.....*
றுங்கவன்மதிலின்புறத்து நுவன்றிவந்தவெனச்சொனார்... ..*

(இ-ள்) அங்கே நின்றவர்கள்போய் வேப்பமாலையைத்தரித்த பாண்டியனைவணங்கி எவ்விடத்திலுந் தூசுகளெழும்பி நெருங்கவும் சின்னங்கள் முழங்கவும் சத்திரவட்டக் குடையையுடைய அரசனே ஆரியதேசத்துக் குதிரைகளின்வரக்கு தம்முடைய உயர்ந்த வலிமையான மதிற்புறத்து நெருங்கிவந்தனவென்று சொன்னார்களென்றவாறு. (௪)

வாசியின்றிரள்வந்தவென்றலும் வாதவூருறையையர்மே.......*
னேசம்வைத்தவர்தம்மைமுன்ன ரழைத்துநீள்கலையாதிதந்.......*

குதிரையிட்டசருக்கம்.

நாகில்வெம்பரிகாணவம்மினென் றேகியங்கெழுந்தடையலார் *
கூடுதன்படைசூழவெயிறை கோவிலின்புறமெய்தினன்........*

(இ-ள்) குதிரைக்கூட்டங்கள் வந்ததென்று சொன்னமாத்திரத்தி லே திருவாதவூரரிடத்தில் நேசம்வைத்து அவரை வரவழைத்து வச்சிர முதலிய வெகுமதிகள்கொடுத்துக் குற்றமில்லாத வெவ்விய குதிரைக ளைப்பார்க்க வாருமென்றுசொல்லி எழுந்து சத்துருக்களும் அஞ்சத் தக்க தன்னுடைய சேனைகள்சூழப் பாண்டியராஜனானவன் அரண்மனை யைவிட்டு புறத்துவந்தான்-எ-று. (௫)

(வேறு.)

வண்டுபடியலங்கனெடுந்தடந்தோண்மாறன்மணிச்சிவிகைமீதேறி
மதுரைமூதூர், கண்டிருகண்களிக்குமாலவாயிற்சடைவளிம்
பரிவரவுகாண்பானென்னவெளிச், செண்டுவெளிநிற்போர்துடனிநீர்
தோய்ந்தசெச்சைநீர்மதுமாலைசிறந்துதூங்கும், தண்டரளமணிப்
பந்தர்நிழற்கீழ்ம்பொற்றவிசின்மிசையினிருந்தான்றானைசூழ *

(இ-ள்) வண்டுகள்மொய்க்கின்ற வேப்பமாலையணிந்த நெடிய விசா லம்பொருந்திய புஜத்தையுடைய பாண்டியராஜனானவன் ரத்நச்சிவிகைமே லேறிக்கொண்டு பழமையாகிய மதுராபுரியிலுள்ளவர்கள் பார்த்து இர ண்டுகண்களுங் களிக்கும்படி திருவாலவாயிலிருக்கின்ற சொக்கநாயகர் கொண்டுவருகிற குதிரைகளின் வரவினைக்காண நினைத்து வையாளி வெ ளிக்குப்போய்ப் பனிநீர்தோய்ந்த செழுமைபொருந்திய செங்கழுநீர் மாலைசிறந்து தொங்குகின்ற குளிர்ச்சிபொருந்திய முத்துப்பந்தலினிழ ற்கீழ் அழகிய பொன்னினாற்செய்த சிம்மாசனத்தின்மேல் இனிதாகவி ருந்தான் சேனைகள்சூழ-எ-று. (௬)

முத்தமிழின்றிறனறிலும்புலவர்சூழ மூதுமறையோர்மங்கலச்சொ
ன்முறையிற்கூற, கைத்திகழுவளைபுலம்பக் கலன்கண்மின்னக்
கன்னியர்களிருபாலுங்கவரிவீசக், கொத்துகவுட்பலமலரின்வாசந்
தோய்ந்து குலவுமிளந்தென்றல்வர மாதர்பாட, மெத்துமணி
முத்தகுடையும்பணிகள்பூண்டு வெண்மதியின்றோற்றம்போல்வீற்
றிருந்தான் ... ... *

(இ-ள்) இயலிசைநாடகமென்னும் முத்தமிழின்றிறத்தை அறிந்தபுல வர்கள்சூழப் பழமையாகிய வேதப்பிராமணர்கள் முறையாக வாழ்த்தெ டுக்கக் கைகளிலணிந்திருக்கின்ற வளையல்கள் தொனிக்க ஆபரணங்கள் ஒளிசெய்ய மங்கையர்கள் இரண்டுபக்கத்திலுமிருந்து வெண்சாமரைகள் வீசப் பலபூங்கொத்துகளின் வாசனையளாவிப்பொருந்திய இளந்தென்

நலாரநுவிச மகளிர்கள்பாட மெச்சுகின்ற மூக்குமாலிகையைத் தரித்துக்கொண்டு வெண்மையாகிய உதயகாலத்துச் சந்திரனைப்போலவீற்றிருந்தான் பாண்டியராஜன்-எ-று. (௭)

மங்குல்படி தடம்புரிசைவாதவூரர் மனங்களிப்பவிழிகளிப்ப வழுவிலாத, திங்களெனுந்தன்மரபுவிளங்கவென்றுந் திருநீறுமஞ்செழுத்துஞ்சிறந்துமல்கச், சங்கினுடன்காளங்கண்முழவமார்ப்பத் தயங்கியெழுந் துகளுயர்வான்றன்மேற்செல்லத், துங்கநெடுங்கடல்பரந்துவருதல்போலத் துவன்றியபரித்திரளின் றோற்றங்கண்டான்.........*

(இ-ள்) மேகங்கள் தங்குகின்ற விசாலமாகிய மதில்சூழ்ந்த திருவாதவூரில் அவதரித்த மாணிக்கவாசகருடைய மனது சந்தோஷிக்கக் கண்கள் களிக்கக் குற்றமற்ற தன்னுடைய சந்திரவம்சம் விளங்க எல்லைக்கும் திருநீறும், பஞ்சாக்ஷரமும், சிறந்து நிலைபெறச்சங்குகளும், சின்னங்களும், பேரிகைகளும், சத்திக்கப் பூமியிலேயெழுகின்றதூள் உயர்ந்த ஆகாசத்தின்மேற் பரவப் பெரியகடலானது பரவிவருகின்றதுபோல நெருங்கிவருகின்ற குதிரைக்கூட்டங்களின் தோற்றத்தைக்கண்டான் பாண்டியராஜனென்றவாறு. (௮)

(வேறு.)

அங்கிளர்மதுரையப்பதியிலாவணித்.........*
திங்களின்மூலநாள் செறிதினத்தினி.........*
லெங்குநீறுமஞ் செழுத்துமோங்கிடச்.........*
சங்கரனிப்பரிச சமூகம்வந்ததால்.........*

(இ-ள்.) அழகுகுடியிருந்த மதுராபுரிநகரத்தில் ஆவணிமாதத்தில் மூலநாளில் எவ்விடத்திலும் திருநீறும் பஞ்சாக்ஷரமும்விளங்கும்படிப் பரமசிவனுமே இப்படிப்பட்ட குதிரைக்கூட்டங்கள்வந்தன-எ-று. (௯)

அத்திரண்மணிவிகழுசோதிமாமுடிப்.........*
பார்த்திவன்விழிநலம்பருகவீதியிற்.........*
கூத்தினர்செயலெனக்குலாவுவாய்ப்பரிச்.........*
சாத்தவர்வரும்பெருந்தன்மைகூறுவாம்.........*

(இ-ள்.) பரிசுத்தமாகிய பிரகாசிபொருந்திய ரத்தினம்பதித்துப் பிரகாசிக்கின்ற பெரியகிரீடந்தரித்த அரசனுடைய கண்கள் விருந்துண்ண வீதியினிடத்திலே கூத்தாடிகள் செய்கையைப்போல விளங்கித் தாவுகின்ற குதிரையைநடத்தி ராவுத்தர்கள் வருகின்ற பெரிய தன்மையைச் சொல்லுவாமென்றவாறு. (௰)

கட்டியகரிகையர் கவின்கொள்வாளினர்... ...*
பொட்டணிநுதலினர் பொன்செய்மேனியர் *
பட்டுடைமருங்கினர் பவளநீள்வடம்... ... ..*
விட்டொளிவிளங்கிய வியன்கொண்மார்பினர் *

(இ-ள்) அரையிலேகட்டிய உடைவாளினையுடையவரும் அழகிய கத்தியை யுடையவரும் சந்தனப்பொட்டணிந்த நெற்றியை யுடையவரும் பொன்னிறமாகிய மேனியை யுடையவரும் பட்டுவஸ்திரத்தையணிந்த அரையையுடையவரும் விட்டுவிட்டு ஒளிசெய்கின்ற பவளமாலையையணிந்த விசாலமாகிய மார்பையுடையவரென்றவாறு. (௰௧)

புன்மயிர்ப்பீலியர்புலியின்றோலினர்... ... ...*
பின்மலர்ப்பாசிலை பிணைத்தகுஞ்சியர்...... ..*
வன்மொழிக்குரலினர் வயக்குதாணியர்... ...*
வின்மலிதக்கினர் வறித்தபார்வையர்.........*

(இ-ள்.) இலேசாயிருக்கின்ற மயிற்பீலியையுடையவரும் பொன்னரி மாலையையுடையவரும் பின்புறத்தில் தாழ்கின்ற குடுமியிலேமலரும் பச்சிலையும் சேர்த்துக்கட்டிய மாலையையணிந்தவரும் உரத்த சொல்லையுடைய குரலினரும் பிரகாசிக்கின்ற அம்புறாத்தூணியுடையவரும் வில்லேந்திய கைகளையுடையவரும் வெறிச்சபார்வையையுடையவரும்-எ-று.

பொன்னியல்குழையினர் பாலன்கொண்மாலையர்
பன்னிறச்சார்த்தினர் பணைத்ததோளினர்......*
சென்னியிற்கதிர் மணி யிலங்குசேடனைப்......*
பின்னியிட்டனைத்தலைப் பிணைத்தகுஞ்சியர் ...*

(இ-ள்.) பொன்னினாற்செய்த குண்டலத்தையுடையவரும் பொன்னரி மாலையை யுடையவரும் பலநிறத்தையுடைய தலைச்சார்த் தணிந்தவரும் பருத்த புயத்தையுடையவரும் சிரோரத்தினம் விளங்குகின்ற ஆதிசேடனைப்பின்னியிட்ட துபோலப்பின்னிய குடுமியையுடையவருமென்றவாறு,

தாங்கியகரிகையுந் தயங்குவேல்களும் ....*
வாங்கியசிலைகளுங் கணையும்வாளுமாய்...... ...*
ஓங்கரிவிவர்வர நாப்பட்டோலிதிருர்... .....*
தேங்கியநதிமதிச் சென்னியண்ணலார்.. ... - *

(இ-ள்.) தாங்கப்பெற்ற உடைவாள்களும், பிரகாசிக்கின்ற வேலாயுதங்களும், வளைந்த விற்படைகளும், அம்பும், கத்திகளும், உடையவருமாய்ப் பக்கங்களிலே இவர்கள்வர நடுவிலேவந்தார்அவராரென்றால், தேன்

கப்பெற்ற கங்காநதியையும் மூன்றாம்பிறைச்சந்திரனையுமுடித்த சிரத்தையுடைய பரமசிவனென்றவாறு. (௰௪)

(வேறு.)

நச்சரசவுச்சிமணி நன்னுமொருவண்ணக்... ......*
கச்சிடைவிசித்துளகவின்கொளுடைவாளும்...... ...*
பச்சைமுழுநீலமொடு பன்னிறவடந்சேர்... ......*
செச்சைநிறமன்னியதிரண்டவிருதோளும்...... .. *

(இ-ள்) நஞ்சையுடைய சர்ப்பத்தினது சிரோரத்நம்பதித்து விளங்கிய நிறத்தையுடைய கச்சை யிடையிலேகட்டி அதனிடத்திலே சொருகிய அழகைக்கொண்ட உடைவாளும், பச்சை நீலம் முதலிய பலநிறத்தையுடைய ரத்நமாலைகளணிந்த சிவந்தநிறத்தையுடையதிரட்சிபொருந்திய இரண்டுபுயங்களுமென்றவாறு. (௰௫)

ஒப்பரியசட்டையு முடித்திலகுபட்டுந்..............*
தொப்பியுமுகத்திடை துலக்கமுளராகிச்... ... ...*
செப்பருநலங்குலவு செண்டொருகைக்கொண்டே *
யிப்படியிலிப்படிவம்யாவருளரென்ன............ ..... *

(இ-ள்) உவமைசொல்லுதற்கரிதாகிய அங்கியும் உடுத்துவிளங்கிய பட்டுடையுந் தலைச்சார்த்தும் உடையவராயுந் திருமுகத்திற் பிரகாசமுள்ளவராயுஞ் சொல்லுதற்கரிய நன்மைமிகுந்த குதிரைச்சவுக்கையொருகையிலேகொண்டு இந்தப் பூமியிலே இந்தவடிவமுள்ளவர்கள் யாரிருக்கிறார்களென்றவாறு. (௰௬)

கட்டிபடிமீதின்மணி கச்சைமணிமுன்பி.............*
னிட்டவிருபக்கமணியின்னொலிபுலம்பப்.............*
பட்டிலகுபக்கரைபணிக்கவரியெட்டும்............ ..... *
விட்டொளிவிளங்குமொரு வெண்பரியிலேறி..... *

(இ-ள்) அங்கவடியிற்கட்டிய மணிமாலைகளும், கச்சையிற்கட்டிய மணிமாலைகளும், முற்புறத்தும் பிற்புறத்தும் இரண்டுபக்கங்களிலும், கட்டியமணிமாலைகளும், இன்னோசையாய் ஆரவாரிக்கப் பட்டினாற்செய்யப்பட்ட கல்லணையிற் கட்டிய சாமரைகளெட்டும் விட்டுவிட்டு ஒளிவிளங்கப்பெற்ற வெள்ளைக்குதிரையின்மேலேறி யென்றவாறு. (௰௭)

விசுகவரித்திரண் மிடைந்தொளிரமீதே..................*
தேசொடுகவித்துள செழுங்குடைவயங்கப்... ....*
பூசல்புரிவெம்பரி பொருந்துபடையூடே .... *
மாசில்குலவாரியரின் மன்னவெனவந்தார்.............. *

(இ-ள்) வீசுகின்றசாமரைக்கூட்டங்கள் நெருங்கிப்பிரகாசிக்கவும்மேலேகவித்திருக்கின்ற செழுமைபொருந்திய குடைகள் காந்தியோடுபிரகாசிக்கவும் யுத்தஞ்செய்கின்ற வெவ்விய குதிரைச்சேனையினிடையிலே குற்றமற்ற ஆரியதேசத்தார்க்கு அரசனைப்போலவந்தார் குதிரைச்சேவகரென்றவாறு. (௰அ)

மன்னவனுமிங்கிவர் வருந்தகைமைகண்டே...........*
தன்னுளமகிழ்ந்திரு தடங்கணிமையாமல்...........*
வன்னமெனுமூர்த்திநெடு மாலரனையல்லா...........*
தின்னவெழிலியாவருள ரென்றதிசயித்தான்...........*

(இ-ள்) பாண்டியனும் இந்தக்குதிரைச்சேவகர் வருகின்ற பெருமையைப்பார்த்து தன்மனமகிழ்ந்து விசாலம்பொருந்திய இரண்டுகண்களும் இமையாமல் அன்னவாகனத்தையுடைய் பிரமதேவன் விஷ்ணு உருத்திரன் இவர்களிலொருவரல்லாமல் இந்த அழக்காம்[illegible]யவர்யாவருளரென்று அதிசயித்தான் என்றவாறு. (௰௯)

பண்ணியதவத்துள பயன்பரியின்மீதே...........*
நண்ணியதெனத்தமினயந்தனர்வியந்தா...........*
ரெண்ணிபமுடித்தனரெனக்கருதிநின்றார்...........*
புண்ணியமறைத்தமிழ்புகன்றதிருவாயார்...........*

(இ-ள்) முன்னேதான்செய்த தவத்தினாலே உண்டாகிய பிரயோசனமே குதிரையின்மேலேவந்ததென்று தமக்குள்ளே மகிழ்ச்சிகொண்டு அதிசயத்தையுடையவராய் எண்ணெண்ணத்தைமுடித்தாரென்று நினைத்துநின்றார் புண்ணியவடிவமாகிய வேதத்தை தமிழ்செய்த மாணிக்கவாசகரென்றவாறு. (௨௰)

தூயசுடர்வேல்பல சுழற்றியெதிர்செல்வார்...........*
வாயொலிவிளைப்பகரில் வாளினைவிதிர்ப்பார்...........*
நேயமொழிதம்மிலணி நின்றமர்செய்வா...........*
நாயினாரன்புடையிலானபரிவீரர்...........*

(இ-ள்) தூய்மையான ஒளியுள்ள அனேக வேலாயுதங்கள் சுழற்றிக்கொண்டு எதிரேபோவார்கள் வாயினாலே ஆரவாரிப்பார்கள் பகைகொண்டு கத்திகளை அசைப்பார்கள் நேசமுடனே தங்களுக்குள்ளே அணிவகுத்துநின்று யுத்தஞ்செய்வார்கள் இப்படிப்பட்ட விநோதமுள்ளவர்களானார்கள் பரமசிவனோடுகூடவந்த குதிரைவீரர்களென்றவாறு. (௨௧)

நீறுசிவநீறிநில நிற்கவுலகாளு...........*
மாறனுமகிழ்ந்துதவ மன்னனாயழைத்தே...........*

கூறரியவாரியகுலேசனொருவீதி ... ... *
யேறும்வகைசென்றுரையுமென்றினிதுசொன்னான் ... *

(இ-ள்) திருநீறும் சைவநெறியும் நிலைநிற்க உலகத்தையாளுகின்றபாண்டியன்மகிழ்ந்து தவராசராகிய திருவாதவூரரையழைத்துச்சொல்லுதற்கரிய ஆரியகுலஅதிபனை ஒருவீதியிலே இந்தக்குதிரைகளை நடத்தும்படிக்குப்போய்ச் சொல்லுமென்று இனிதாகச்சொன்னானென்றவாறு.

என்னிவன்மொழிந்ததனையெண்ணித்தமியேனிரங்கா.........*
மன்னியவருந்தவரும்வான்முகமலர்ந்தே............*
கன்னலைநலங்கொள்கனியைக்குறுகிநெஞ்சான்......*
முன்னுறவணங்கிவிழிமுத்துதிரநின்று... ....*

(இ-ள்) என்னவார்த்தை யிதுவுஞ்சொன்னதேயென்று தமக்குள்ளேயிரக்கமுற்று நிலைபெற்ற அரியதவத்தையுடையமாணிக்கவாசகரும் ஒளிபொருந்தியமுகத்திலே மலர்ச்சியுள்ளவராய்க் கரும்பையும் நற்சுவைகொண்டகனியையும் ஒத்த பரமசிவனுக்குச் சமீபத்தேபோய் மனத்தினாலேமுன்னேவணங்கிக் கண்களிலேயிருந்து முத்துகள்போல நீருதிரும்படி நின்றுசொன்னவாறு. (௨௩)

மன்றல்மலரோனுநெடுமாலுமுருவேறா............*
யன்றுமுதலின்றுமறியாதவனைநின்றாய்............*
வென்றிவிடையன்றியுயர்வெம்பரியின்மீதே.........*
யின்றுனைவணங்கமுனமெத்தவமியன்றேன்........*

(இ-ள்) வாசனைபொருந்திய தாமரைமலரிலிருக்கும் பிரமனும் மகாவிஷ்ணுவும் உருவம் வேறாய் அன்றுமுதல் இன்றைவரைக்கும் அறிதற்கரியனாயிருந்தவனே வெற்றியையுடைய இடபவாகனத்திலல்லாமல் உயர்ச்சியுள்ள வெவ்விய குதிரைவாகனத்தின்மேலே இன்றைக்கு உன்னைக் கண்டுவணங்க முன்னே என்னதவஞ்செய்தேன்-எ-று. (௨௪)

வந்தபடியிவ்வுருவிலன்றியிதுவல்லா..................*
லந்தவடிவிலுன்னையாரறியவல்லார.................. *
ரிந்தவகைகண்டடியவர்க்கெளிமையென்றே........ *
சிந்தைதனிலன்பொடு தெளிந்தனவுலகெல்லாம்......*

(இ-ள்) தேவரீர் எழுந்தருளிவந்த இவ்வடிவைக்கண்டுவணங்கப்பெற்ற இதுவல்லாமல் மனவாக்குக்கெட்டாத அந்த நிஷ்களவடிவாகியிருந்தபடியால் உன்னை யாவரறியவல்லவர் இந்த வடிவங்கண்டல்லவோ பெரியோர்கள் அடியார்களுக்கு எளியனாயிருக்கின்றாயென்று மனத்தில் அன்புடனே தெளிந்து சொல்லுகிறார்களென்றவாறு. (௨௫

என்றுருகமன்பலவியம்பியருளாலே.................*
வென்றிபுனைமீனவன் விளம்புமொழிசொன்னர்...*
கொன்றைமுடியாருமதிசைந்துகொடைமாற......*
னன்றியொடுகாணும்வகைநற்பரியுகைத்தார்.........*

(இ-ள்) இப்படியென்று அநேக உபசாரவார்த்தைகள்சொல்லி அருளினாலே வெற்றியைத்தரித்த பாண்டியராசன் சொன்னசொல்லை விண்ணப்பஞ்செய்தார் கொன்றைமாலிகைதரித்த முடியையுடைய பரமசிவனும் அதற்கிசைந்து ஈகையையுடைய பாண்டியராசன் நன்றாகப்பார்க்கும்படி நல்லகுதிரையை நடத்தினர்- எ-று. (௨௬)

மன்னரவபந்தமுடன் வட்டநெடுவீதி...... ....*
யென்றுமிவுளித்தொழில்களியாவுமினிதேறி... ...*
யுன்னுமனவேகமெனவோடுமுயர்பாய்மா ....*
நன்னடமிடும்படிநடாத்தியெதிர்வந்தார்............*

(இ-ள்) நிலைபெற்ற நாகபந்தம் விருத்தம் நெடுவீதியென்கின்றகுதிரையினுடைய நடைபேதமெல்லாம் இனிதாகநடத்திக்காட்டி நினைக்கின்ற மனோவேகம்போல வோடுகின்ற உயர்ந்தகுதிரைகளானவை நல்லநடனமிடும்படி நடத்திக்கொண்டு எதிர்வந்தார்- எ-று. (௨௭)

வெம்பரியினண்ணலைவியந்துதமிழ்மாறன்.........*
கம்பமுடியெய்தவொரு கைவிரல்சுழற்று... ......*
வம்பொன்விலையில்லதொரருங்கலையளித்தா........*
னெம்பரமர்செண்டின்மிசையேற்றனைசெய்தார்*

(இ-ள்) வெவ்விய குதிரைக்கு எசமானைப்பார்த்து அதிசயப்பட்டுத் தமிழைவளர்த்த பாண்டியன் சிரக்கம்பஞ்செய்து ஒருகைவிரலைச்சுழற்றி அழகியபொன் இவ்வளவென்றுவிலையில்லாததா யரியவஸ்திரமொன்றுகொடுத்தானெம்முடையகடவுளானவர்சவுக்கின்மேலேற்றுக்கொண்டு புனைசெய்தார்- எ-று. (௨௮)

[வேறு.]

ஏற்றவொண்கலையநேச மெய்நிலைகுருவன்செண்டில்*
காற்றெனவினாவிமைத்துக் கடிதுதன்கரத்தில்வாங்கிப்...*
போற்றிலன்முடியின்மீது புனைந்திலனென்றுமாற......*
வீற்றனன்மறைப்பினாலே நெஞ்சிடைவெகுட்சிகொண்டான்.

(இ-ள்) அதைபாண்டியராஜன்கண்டு நாம்கொடுத்ததகுதியுள்ளபிராகசம்பொருந்திய வஸ்திரத்தை விருப்பமில்லாதவனுக்காற்றைப்போல ஒருவலியசெண்டமல் வினை வுடனேற்றிக்கொண்டதேயன்றி புகழாமலும்

சிரசிலே தரித்துக்கொள்ளாமலும்அவமதித்தானென்று பாண்டியராஜன் திருநீற்றையணிந்த கடவுளினுடைய மறைப்பினாலே கோபங்கொண்டார் என்றவாறு. (௪௯)

வெளிப்படவரியமேனிவிண்ணவன்கண்ணுநெஞ்சுங் ... ... *
களிப்புறவருதல்கண்டுங்கண்டிலன்கன்னிநாட... ... .*
னொளித்துலகெங்குநிற்போனுறுபவமொழித்தருண... *
மளித்திடினன்றியாவரவன்றிறந்தெரியவல்லார்......... . *

(இ-ள்) வெளிப்படக்காணுதற்கரிய அருமைத் திருமேனியையுடைய பரமசிவனானவர் பார்த்தவர் கண்களும் மனமுஞ் சந்தோஷமடையும்படி வருகிறதைப்பார்த்தும் பாண்டியன் காணவில்லை ஒளித்துக்கொண்டு உலகெங்குநிற்கின்ற கடவுளிருந்த பிறவியையொழித்து அறிவு கொடுத்தாலல்லாமல் எவர்கள் அவருடைய தன்மையைத் தெரியவல்லவர்கள்-எ-று. (௫௰)

எண்டிசைமன்னரன்பாலீந்தமென்கலிகள்யாவுஞ் ... ...*
கொண்டிடைக்கோடலன்றோர்தேயநல்லியற்கையென்றே *
வண்டமிழ்வாதவூரர்மாமதுரேசனெஞ்சிற் ....*
கொண்டுளமுனிவதீரக்குறைந்துமுன்னின்றுசொன்னார். *

(இ-ள்) எட்டுத்திசைகளிலுமிருக்கின்ற அரசர்கள் அன்பால் தமக்குக் கொடுக்கப்பட்ட வஸ்திரங்களையெல்லாம் சவுக்கிலே வாங்கிக்கொள்வது அவரது தேசவழக்கமென்று வளத்தையுடைய தமிழ்ப்பாடுகின்ற திருவாதவூரானவர் பாண்டியராஜன் முன்னேநின்று அவன்மனத்திலேகொண்டிருந்தகோபம் சாந்தியாகும்படி தாழ்ந்துசொன்னார்-எ-று. (௫௧)

நலத்தகுமிந்தநீர்மைகேட்டபினயந்துமன்னன் .. ..*
கலக்கமிலிவுளிநன்னூல்கற்றவர்தம்மைநோக்கி... ... ...*
யிலக்கணவிதியாலுள்ளவிரும்பரியிழிவுமேன்மை... .....*
துலக்குடனும்மினுடியெம்முடன் செல்லுமென்றான்— *

(இ-ள்) நன்மைபொருந்திய இந்தவழக்கத்தைக்கேட்டபிற்பாடு அன்புகொண்டுகலக்கமில்லாத அஸ்வலக்ஷண சாஸ்திரங்கற்றறிந்தவரைப்பார்த்து லக்ஷணவிதிப்பிரகாரமிருக்கிற பெரியகுதிரையினுடைய இழிவும் உயர்வும் பிரகாசமாக உங்களுக்குள்ளேசோதித்து நம்மோடேசொல்லுமென்று சொன்னான் பாண்டியராஜன்-எ-று. (௫௨)

சொற்றிசந்தரகநூலின்றுணிபொருளுணர்ந்துளோருங் *
கொற்றவெம்பரிகட்குள்ளகுற்றமுங்குணமுநாடிப்... ...*

பொற்றடங்கிரியின்மீதுபொருகயல்பொருந்துமீண்ட...*
வெற்றிகொண்மன்னர்கோன்முனிவ்வகைவிளம்பலுற்றார் *

(இ-ள்.) சொல்லினாற் பிரகாசிக்கப்பட்ட அவ்வசுவலக்ஷணத்தினுடைய நிச்சயமாகிய பொருளைத்தெரிந்தவர்கள் வெற்றிபொருந்திய விருப்பத் தக்க குதிரைக்குள்ளே குற்றத்தையும் குணத்தையும்பார்த்து மகமேருமலையின்மேல் தன்னுடைய மீனக்கொடியை யெழுதிவைத்துத் திரும்பிய வெற்றியைக்கொண்டஅரசர்க்கரசனாகிய பாண்டியராஜன் முன்பாக இந்தப்படிசொன்னார்கள் -எ-று. (௫௫)

(வேறு.)

தாவினைச்சந்திரசுழியாமண்டாவர்த்தந் தன்னுடையடியிற்சுழி
யாமுடலின்பக்கமேவுசுழிகௌவகமாங்காசவர்த்தமேன்மை
திகழ்மூன்வலையச்சுழிதானுகும்- பாவுசெழுங்கேதாரியடியி
ற்சேர்ந்தபயனில்கொமிஞ்சுழிகேசாவர்த்தமாகும் - பூவமரு
ங்கச்சையிற்பட்டடையெனப் புகன்றசுழியிச்சுழிகள்டுனை
தரவாகி. ... ... *

(இ-ள்) துன்பத்தைத்தருகின்ற சந்திரச்சுழி அண்டாவர்த்தமென்னுந் தன்னுடையடியிலிருக்கின்ற சுழிகளும் உடலிலொருபக்கத்திலிருக்கின்ற சுழியாகிய கௌவகமும்காவர்த்தமும்மேன்மையாக விளங்கியமூன்வளையச்சுழியும் பரவியசெழுமையுள்ள கேதாரிச்சுழியும் காலிலிருக்கின்ற பிரயோசனமில்லாத கொடியசுழியாகியகேசாவர்த்தமும் பொலிவோடுங்கூடிய கச்சைநிலையிற் பட்டாடையாகச் சொல்லப்பட்ட சுழியும் ஆகியஇத்தச்சுழிகள் பொருந்தாதனவாகி -எ-று (௫௬)

கொம்புகன்னந்திருகுகன்னநஞ்சபாதங் கொள்ளிக்கால் வெள்ளிக்
கண்மடலிகுன்று, வெம்பதழற்கடலைமுகப்பரனேகண்ட மண்டப்
பாழ்விலங்கிபலவண்டமாதல், செம்பொரியாமக்கினிசித்திரங்கண்
மூன்று சிறந்தினியமட்டிற்பா லுறுபாலென்றே, யம்புவியோர்
மொழிந்தபழுதிவையுமின்றி யடிநாவிற்குரமிரட்டையாகாவாகி*

(இ-ள்) கொம்புபோலிருக்கு நீண்டகாதும் முறுக்கியகாதுப் ❀சுறந்தகாலொன்றும், * விளர்த்தகாலொன்றும், விளர்த்தகண்ணும், தினிகுன்றுமையும்வெப்புகின்றதீயையுடைய மாயனுருத்திரனைட்போலு நீலகண்

❀ நஞ்சபாதமாவது மூன்றுகால விளர்த்து ஒருகால சுறந்தது.
* கொள்ளிக்காலாவது மூன்றுகால்சுறந்து ஒருகால் விளர்த்தது.

டரும் பீஜமில்லாமையும் ஏறத்துறையவிருக்கும் பெரியபீஜரும்செவ்வையாகிய பதுமையும் அக்கினியும் சீக்கிரமும்போல் அசைவில்லாமையும் முகம், வால், நாற்கால்க ளிவைகளிற் சுழியில்லாமையுமெனப் பூலோகத்தார் சொல்லிய குற்றங்களில்லாமல் கழுத்தடியில் மார்க்கண்டமிரட்டையாயிராமல்-எ-று. (௫௫)

சிரமதனிலிரண்டுசெழுந் தனைப்பினன்கு சிறந்தவுரந்தனிலிரண்
டுநுதன்மேலொன்று-குரலமிசைதிற் றசுழியொன்றின்றுக்குலவிய
வீரைந்துசுழி குறையவாகி-நரிவெருகுகருங்காகமலகையோரி ஞா
ளிசெழுங்கேழலொலிக்குரலின்றாகி-விரவுபெருந்திரைவேலை மங்
குல்சங்கம் விடைமுழவம்போன்முழக்க மிகவுண்டாகி.........*

(இ-ள்) சிரசிலே இரண்டுசுழியும் செழுமையுள்ள நாபியிலே நான்கு சுழியும் சிறந்தமார்பிலே யிரண்டுசுழியும் நெற்றியிலே ஒருசுழியும் உட்கட்டிலே ஒருசுழியும் ஆகிய சுழிகள்பத்தும் குறையாமல் நரி பூனை கரியகாக்கை பேய் ஓரி நாய் செழுமையுள்ளபன்றி இவைகளுடைய சத்தமில்லாதவையாய்ப் பெரிய அலையையுடைய கடல், மேகம், சங்கம், இடபம், பேரிகை, இவைகளைப்போல சத்தமுடையவாம்-எ-று. (௫௬)

உருத்திகல்செய்புலிபுளியுங் கழுதைசெந்நா யொண்பூனைநரியி
னுடன்கரியகாகந், தரித்தவழற்புகைநிறமும்புனையாவாகித் தருக்கி
மருந்தெனுங்கவனத் தன்மையெய்தி, விரித்தகதிர்வெண்டரளந்
திங்களில் மென்கமலத்தாதுசெழுங் கனகங்காயா, வரத்தமலர்நல்
லபசுங்கிளிபோல வமைந்தவொளிதயங்கியவங்கத்தவாகி......*

(இ-ள்) கோபித்துப்பகைக்கின்ற புலி கரடி கழுதை செந்நாய் ஒளியையுடைய பூனை நரி தரிக்கப்பெற்ற கரியகாகம் தீ புகை இவைகளினுடைய நிறத்தைப் பொருந்தாதவைகளாய் இறுமாப்புடையனவாய் வாயுவென்னும் வேகத்தோடுங்கூடிப் பிரகாசித்த கிரணங்களையுடைய வெள்ளியமுத்துக்கள் சந்திரன் நிலாத்திரளம் மெல்லியதாமரையினுடைய மகரந்தம் செழுமைபொருந்திய பொன் காயா செவ்வரத்தமலர் நல்லபச்சைக்கிளியாகிய இவைகள்போல்அமைந்தஉருவத்தையுடையவராகின-று.

நெற்றியகன்றுயர்குரவமுடைத்தாய்வெண்மை நிறைந்துதமிலொ
த்திலகுமெயிற்றவாகித், துற்றநறுங்கந்தமிகச் சிறந்துநாவுஞ் சூத
விளந்தளிர்போலும் அருணந்தோய்ந்தே, யுற்றவிரண்டிமையயி
ருந்தொகையுண்டாகி யுக்கிரமாம்விழிப்பார்வையுடையவாகி, மூன்
றுமெயிற்றசையின்றியுள்வளைந்து மூக்கோணமெனத்திகழு மூல
த்தவாகி...*

(இ-ள்) நெற்றிபார்த்து உயர்ந்த மேலுதட்டையுடைய வாய் வெண்ணிறநிறைந்து தம்பிக்லவரிசையாய் ஒத்துப்பிரகாசிக்கப்பெற்ற பற்களையுடைய வாய்நிறைந்த நல்லவாசனைசிறந்து நாக்கும்மாவினிளந் தளிர்போலும் செம்மை நிறம்பொருந்தி இரண்டிமைமயிருந் திரட்சியுடையவாய் உக்கிரமாகிய கண்பார்வையுடையவாய் தேகத்தில் அதிகமாமிசமில்லாமல் உள்ளேவளைந்து முக்கோணமாய்ப் பிரகாசிக்கும் முகத்தையுடையவாமென்றவாறு. (௫௮)

உளையிநுடன்றலைமயிரு நிறமொன்றாகி யுரத்திநுடன்கழுத்துரக
படமேபோன்று,வளைசிறந்த தொனிபரந்துருவிந் துள்வாங்கி மண்
டலமுண்டாயுரங்கொள்குரங்கள்சேர்ந்து, கிளைகொணரம்புள்ளரந்
து நசைதாமெனுன்றிக்கிளர்முழந்தாமணெளித்தபதங்கெழுமலின் றி-
றெளிமுதுகுபுனைந்துடை திரண்டுதண்டை நீண்டுடலமெய்த்த
நிற நீர்மையாகி.......... .. ..*

(இ-ள்) கழுத்துமயிரும் தலைமயிரும் ஒருநிறமாய் மார்பினுடனே கண்டமும் பாம்பின்படம்போலொத்துச் சங்குகள்போலத் தொனியுண்டாய்க் குவிந்து உள்வாங்கி மண்டலஞ்செய்வனவாய் வலிமைகொண்ட குளம்புடையவாய்க் கிளைகொண்ட நரம்புகள் மறைந்து தசையையுடையவாய்ப் பிரகாசிக்கின்ற முழங்கால் தெளிந்தவில்லாமல் தெளிப்பாகிய முதுகும் பெருத்ததுடைகளுந்திரண்டு தண்டைக்காலானது நீண்டு மெருகுள்ள நிறத்தையுடையவாமென்றவாறு. (௫௯)

மிக்கசெழுமறைநாவிற் கமலநாதன் விழிப்புனலில் விண்ணோர்க
ளெண்மர்தம்பால், மைக்கடன்மேலமிர்தத்திலக்கிமீறின் மல்கு
கருப்பையிலுாக வண்டத்தலினிற், றெக்கவெழுபேதமெனுமிவ
ற்றிற்றோன்றத் தொன்மையவாயீரண்டுதிணைத்தாமெற்றி,யொ
க்கவெளுக்கும்பரிகளுளவாய்வானி லொண்புனலின்செல்லுநெறி
யுளவுமாகி.............. ....*

(இ-ள்) மிகுந்த செழுமையுள்ள சாமவேதத்தினுடைய நாவினுபிரமதேவனுனவன் ஓமஞ்செய்யும்போது அவன் கண்ணினின்று மையில்வழிந்த நீரினிடத்தும் இந்திரன்முதலிய திக்குப்பாலகரெண்மரிடத்தும் சமுத்திரத்திற்பிறந்த அமிர்தத்தினிடத்தும் அந்தப்பிரமனோமஞ்செய்த அக்கினியிடத்தும் நிறைந்தகருப்பையிலும் லட்சுமி சாபத்தாற்பிரமன்கோட்டானுக அந்தக்கோட்டான்முட்டையிலும்ஆகியஇவ்வேழிடத்திலும் உற்பத்தியானபழமையுடையனவாய் நாலுகாலும்நெற்றியும்

ஒக்கவிவளுத்திருக்கும் பஞ்சகல்யாணி என்னுங்குதிரைகள் ஆகாயத்தி லும் நீரிலும் செல்லுகின்ற வழியுண்டாய் என்றவாறு. (௬௰)

மங்காளன் சாரங்கன் கங்காநீலன் மெளவழகன் கொங்காளன்சன்ன
சம்பான், குங்குமச்சோரன்கரியாவீலன்சாரன் குலவுமள்ளாறுை
ஞ்சிவந்தானல்லான்பொல்லான், றங்குகருங்கார்சம்பனென்றகூ
றுந் தன்மையுளபன்னிறமும் புனைந்தசாதித், துங்கமிகும்பரியி
வைவையென்றவற்றின் றன்மைத் தொன்மையுளாத்தரசனைமுன் னெ
டுத்துநின்றார் ... ... *

(இ-ள்.) மங்காளனென்றும், சாரங்கனென்றும், கங்காநீலனென்றும், மெளவழகனென்றும், கொங்காளனென்றும், சன்னசம்பானென்றும், குங்குமச்சோரனென்றும், கரியானென்றும், நீலனென்றும், சாரனென்றும், விளங்கிய மள்ளானென்றும், உரஞ்சிவந்தானென்றும், நல்லானென்றும், பொல்லானென்றும், கருங்கார்சம்பானென்றும், பன்னிறத்தையுமுடைய சாதியாய் உயர்ந்த குதிரைகளிவைகளென்று அவற்றின் மேன்மையெல்லாஞ் சொல்லிப் பாண்டியராஜனைத்தொழுது நின்றார்களென்றவாறு. (௬௧)

நற்பரியினியல்புணர்ந்தோரின்னவாறு நவின்றமொழிகேட்டுமிக
நயந்துவெள்ளி, வெற்பனையவிடைமேற்பிரியளிக்குந்தெய்வ வெம்ப
ரிகள்யாவும்விலை மதித்தபின்னர்ப், பொற்புடைய தன்பொருண்
மேலென்மடங்கு போந்ததனாற்பொங்குமகிழ்வெய்தியமாறன், றத்
பரனைமுகநாடிக்கயிறுமாறித் தருகதுரகத்தொகுதித் தன்னையெ
ன்றான். ... ... *

(இ-ள்) நன்மையுள்ள குதிரையினுடைய லட்சணங்களை யறிந்தவர்கள் இந்தப்பிரகாரஞ்சொன்ன சொல்லைக்கேட்டு மிகவும் நயப்படைந்து வெள்ளிமலையையொத்த இடபவாகனத்திலேறிவந்த கடவுளாற் கொடுக்கப்பட்டதெய்வீகமுள்ள வெவ்வியகுதிரைகளையெல்லாம்விலைமதித்தபின்பு அழகுபொருந்திய தான்கொடுத்த பொருளின்மேல் எட்டுப்பங்கு அதிகமாகிய விலைபெற்ற குதிரைகள்வருதலினாலே மிகுந்தமகிழ்ச்சியடைந்துபாண்டியனானவன்பரமசிவனுடைய திருமுகத்தைப்பார்த்துக் கயிறுமாறித் தாக்கடவீர் குதிரைக்கூட்டங்களையென்று சொன்னவாறு.

(வேறு.)

காத்துலகனைத்துமுய்யக் கண்ணருள்செய்யநிதிப்... ... *
பார்த்திவன்கருமஞ்செய்வார் பற்றியங்காத்தில்வாங்கச் *

சாத்தவர்தம்மிலங்கோ சால்பினர்கயிறுமாறி ... ...*
யீத்தனர்பந்தியூடு சேர்த்தனரிவுளியெல்லாம்... ... *

(இ-ள்) உலகமெல்லாம் பாதுகாத்துப் பிழைக்கும்படி கிருபாநோக்கஞ்செய்கின்ற நீதியையுடைய பாண்டியராஜனது காரியஞ்செய்வோர்கள் கையினாற் பிடித்துவாங்கக் குதிரைச்சாத்தர்களுக்குள்ளே பெருமைபொருந்திய ஒருவர் கயிற்றைமாறிக்கொடுத்தார் உடனே அவர்கள் குதிரைகளையெல்லாம் லாயத்திலே சேர்த்தார்கள்-எ-று. (௬௩)

திண்டிறல்செழுவுநேமித்தென்றிசைக்கிறையுஞ்செய்ய ..*
வண்டமிழ்க்கிறையுங்காணவந்திடுந்திசையினேகிப்... ...*
பண்டைநற்படிவமாகிப்பணிந்துவிண்ணவர்க்குள்சூழக்...*
கொண்டலைப்பொருவுகண்டர்குலவுதங்கோயில்புக்கார்...*

(இ-ள்) மிகுந்தவலிமைபொருந்திய சக்கரஞ் செலுத்துகின்ற தென்றிசைக்கு அதிபனாகிய பாண்டியராசனும்செம்மையாகியவளத்தையுடைய தமிழுக்கரசராகிய மாணிக்கவாசகரும் காணும்படியாய்த் தாம்வந்த திசைவழியாகச்சென்றுபழையவடிவங்கொண்டுதேவர்களெல்லாம் வணங்கிச்சூழ மேகம்போன்ற கரியகண்டத்தையுடைய பரமசிவனானவர் பிரகாசிக்கின்ற தமதுகோயிலிற் புகுந்தாரென்றவாறு. (௬௪)

வாய்ந்தனபரிகளும்மாலென்றெழில்வாதவூரின் ... ... *
வேந்தனைமனையிலேகவிடுத்துளமகிழ்ச்சிகூர்ந்து.........*
சார்ந்தமெய்த்தகைமையோருந்தானையுஞ்சூழவேகி... ...*
யாய்ந்தநற்றமிழ்நூல்வல்லவரசனுங்கோயில்புக்கான்......*

(இ-ள்) இப்படிப்பட்ட குதிரைகள் உம்மாலெனக்குக் கிடைத்தனவென்று திருவாதவூர் வேந்தராகிய மாணிக்கவாசகரை அரண்மனைக்குப் போகவிடுத்து மனமகிழ்ச்சியடைந்து தன்னைச்சார்ந்த பெரியோர்களும் சேனைகளும் சூழும்படிச்சென்று ஆய்ந்திருக்கின்ற நல்லதமிழ்நூலில் வல்லவனாகிய பாண்டியராசனும் தன்னுடைய அரண்மனையிற் புகுந்தானென்றவாறு. (௬௫)

அத்தினமகல்மாலையணைதலும்பரிகளெல்லாம் ... ...*
நித்தனதருளினாலே நெடுங்குரனரிகளாகி......................*
மெய்த்தமிழ்மதுரைமூதூர்விழித்துயிலொழித்திரங்கத்- *
றத்தமினுடன்றுகூடித்தனித்தனிக்களித்துநின்று... ... .. *

(இ-ள்) அந்தப்பகல்போய் இரவுவந்தபின்பு பரமசிவனுடைய கிருபையினாலே குதிரைகளெல்லாம் நெடிய குரலையுடைய நரிகளாய் உண்

மையாகிய தமிழ் விளங்குகின்ற மதுரைமாநகராருடைய நித்திரையை யொழித்து இரங்கும்படித் தமக்குள்ளே தாமேகூடிச் சண்டையிட்டு வெவ்வேறுகச் செருக்கடைந்து நின்றன-எ-று. (௪௬)

(வேறு.)

நின்றநின்ற நெடும்பரியாளர்மேற்............*
சென்றுவெம்பகை செய்துவெருட்டியே ..*
துன்றுகின்ற துரங்கமொருங்கொடு... ......*
கொன்றுநின்றுயர் கூவிளிகொண்டவால்..... *

(இ-ள்) அங்கங்கிருந்த நெடிய குதிரைக்காரர்கள்மேல் குதிரைகள் போய் வெய்யபகைகொண்டு வெருளச்செய்து நெருங்கியிருக்கின்ற பழையகுதிரைகளை ஒருங்குபடக்கொன்றுநின்று உயர்ந்த பெருங்கூச்சல்கொண்டன-எ-று. (௪௭)

வரைசெய்கோபுரமாடநெருங்கிய ... .*
வரசர்வீதியுமாவணவீதியு.......................*
முரசவோசைமுழக்கொழிந்தேமிக்க...... ...*
குரைகொள்வாய்நரிகூக்குரலானதால்... ......*

(இ-ள்) மலையைப்போற்செய்த கோபுரமும் உப்பரிகைகளும் நெருங்கிய ராஜவீதிகளும் கடைவீதிகளும் பேரிகையோசை முழக்கம் நீங்கி மிகுந்தசத்தத்தைக்கொண்ட வாயையுடைய நரிகள் ஊளையிடுஞ்சத்தமாயிற்றென்றவாறு. (௪௮)

பாடியாரணப்போற்றமன்றிற்பயின்......... ......*
றாடியார்விளையாட்டின்புதுமையா ... ...*
லோடியாருமொளித்திடவென்றொரு ... ... *
கோடியாலதுகூவுநரிக்குழாம் ... ...*

(இ-ள்) வேதங்கள்பாடிப் போற்றும்படிக்குக் கநகசபையிலே நிருத்தஞ்செய்கின்ற கடவுளுடைய விளையாட்டின் புதுமையினலே எல்லாருமோடி யொளித்துக்கொள்ளுங்கோளென்று ஒருகோடிநரிகள்கூட்டங்கொண்டுகூவுமென்றவாறு. (௪௯)

துக்கமாறன்றொகுபடைவெங்கொலை... ... ... *
தங்குமாயுதந்தாங்கியெதிர்க்கவே ... ... *
யெங்குமானநரிகளெல்லாங்கொடுஞ் ... ...*
சிங்கமாயமர்செய்யத்தொடங்குமால். ... ... *

(இ-ள்) உயர்ச்சிபொருந்திய பாண்டியராஜனுடைய கூட்டமாகிய சேனைகள் வெய்ய கொலைதங்கிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு எதி

ர்க்க எங்கும் பரவியிருக்கின்ற நரிகளெல்லாங் கொடிய சிங்கம்போல அமர்செய்யத் தொடங்குகின்றதென்றவாறு. (௫௰)

நீடுவாடையிடந்தொறு நின்றணி ... ... *
கூடுவார்மிகக்கூவிவெருட்டுவா ... ... *
ரோடுவாரொளித்தோடிப்புகுமிடந் ... ...*
தேடுவாரெதிர்சென்றமர்செய்குவார் ... *

(இ-ள்) நீடிய தெருக்கள்தோறும் நின்று அணிவகுப்பாகக் கூடுவார்கள் மிகவுங்கூச்சலிட்டு மயக்கச்செய்வார்கள் ஓடுவார்கள் ஒளித்துக்கொண்டு ஓடிப்புகுந்துக்கொள்ளுமிடந்தோறுந் தேடுவார்கள் எதிரேசென்று யுத்தஞ்செய்வார்களென்றவாறு. (௫௧)

எங்களாருயிர்காத்தருளின்றணி ... ... *
திங்களாயெனத்தெய்வம்பரவுவா ... ... *
ரங்கபாடமடைத்தரண்செய்குவார் ... *
மங்குலாடுமதிற்றலையேறுவார் ... ... *

(இ-ள்.) எங்களுடைய ஆத்மாவை இன்றைக்குக் காத்திரட்சிக்கவேணும் மூன்றாம்பிறையைப்பணிந்த பரமசிவனேயென்று சொர்க்கநாயகனைப் பரவுவார்கள் அழகிய கதவுகளைச்சாத்திக்கொண்டு காவல்செய்வார்கள் மேகங்கள் விளையாடுகின்ற மதிலின்மேலேறிக்கொள்வார்கள்-எ-று.

நற்றவஞ்செயனன்றிலதானதோ .. ... *
கொற்றவன்செய்ய கோல்கொடிதானதோ .. *
விற்றிதன்பயனென்னெனவின்னணை ... *
முற்றிரங்கினர்கூடலுளோரெலாம் ... ...*

(இ-ள்) நம்முடையதேசத்தில் நல்லதவஞ்செய்வது நன்மையில்லாததாயிற்றோ? அரசனுடைய செங்கோல் கொடிதானதோ? இன்றைக்கு இதனுடைய பிரயோசனம் என்னவோவென்று இந்தப்பிரகாரம் இரங்கினார்கள் மதுராபுரியிலுள்ளவர்கள்-எ-று. (௫௩)

தூயவன்றுரகத்தொழிலாளர்கள் ... ... *
கோயிலின்கடைகூக்குரல்செய்துபோய் .... *
மாயவெம்பரி வந்தவெல்லாநரி ... ... *
யாயவென்றரசற்கெதிர்கூறினார்... ... ...*

(இ-ள்) பரிசுத்தராகிய வலிமையுள்ள குதிரைக்காரர்கள் அரண்மனைவாசலில் வாயைத்திறந்து கூச்சலிட்டுக்கொண்டுபோய் மாயமாய்வந்த வெம்மைபொருந்திய குதிரைகளெல்லாம் நரியாய்ப்போயினவென்று பாண்டியராஜனுக் கெதிரேசொன்னார்கள்-எ-று. (௫௪)

மாக்களோசையும் வாம்பரியோசையுங்.........*
கூக்குலாவு குறுநரியோசையு...............*
மீக்கொண்மாமுடி மீனவன்றன்செவி..........*
தீக்கொள்வேலைச் சொருகியதொத்தவால்.....*

(இ-ள்.) மனிதர்களுடைய சத்தமும் தாவுகின்ற குதிரைகளுடைய சத்தமும் ஊளையிடுகின்ற குறியவாகிய நரிகளுடைய சத்தமும் மேலாகிய கிரீடத்தைக்கொண்ட சிரசையுடைய பாண்டியராஜாவின் காதிலே காய்ந்த வேலாயுதத்தைச்சொருகிய தொத்திருந்தன-எ-று. (௫௫)

இந்தவாறொலி கேட்டிருகண்டழல்.............*
சிந்தவாகஞ் சிறுவெயர்ப்பெய்தவே.......... ...*
யந்தமாறன் வெகுட்சிகண்டண்ணலார்......... *
வந்தமாய நரிப்படைமாற்றினர்..... .... *

(இ-ள்) இந்தப்பிரகாரமாகிய சத்தங்களைக்கேட்டு இரண்டுகண்களுந் தீப்பொறிசிந்தத் தேகத்தில் வேர்வை சிறிய துளிகளாக உண்டாக அந்தப் பாண்டியராஜன் கோபிக்க அதைக்கண்டு பரமசிவனானவர் மாயமாய் வந்த நரிச்சேனைகளை நீக்கினாரென்றவாறு, (௫௬)

பொன்கொணாடன் புனைந்தநலந்திகழ் .. ...*
மின்கொளாரம் விளங்கியமொய்ம்பினான்..... *
றன்கணொத்த நடப்பவர்தண்டல்செய்...... .....*
வன்கணாளரை வம்மெனக்கூறினான்.............*

(இ-ள்) செல்வத்தைக்கொண்ட பாண்டியநாட்டையுடையவனும் அலங்காரஞ்செய்த நன்மைபொருந்திய பிரகாசங்கொண்ட முத்துமாலை விளங்கிய புயத்தையுடையவனுமாகிய அரசனானவன் தன்னுடைய கண்ணுக்குச் சமானமாய் நடக்கின்ற கொடியதண்டற்காரரை வாருமென்று ஆக்கியாபித்தான் என்றவாறு. (௫௭)

[வேறு.]

நரியினிற்றொகுதியெல்லா நற்பரித்திரள்களாக்குஞ்... ...*
சரிதியைக்கொணர்மினென்னத் தாடொழுதவர்களோடி *
யிருபிறப்புடையராகி யினிப்பிறப்பில்லார்தம்மை... ...*
விரைவினிற்குறுகிநம்மை யழைத்தனன்வேந்தனென்றார்,*

(இ-ள்) நரியினுடைய கூட்டங்களெல்லாம் நல்ல குதிரைக்கூட்டங்களாக்குகின்ற சரித்திரத்தையுடைய மந்திரியைக் கொண்டுவாருங்களென்று சொல்லத் தண்டற்காரர் அந்தப்பாண்டியன் பாதத்தை வணங்கிச் சீக்

சிரமாகப்போய் இரண்டுபிறப்பை யுடையவராகி யினியொரு பிறப்பி யில்லாத மாணிக்கவாசகரைக்கண்டு உம்மை அரசனழைத்துக்கொண்டு வரச்சொன்னானென்றார்க ளென்றவாறு. (ருஅ)

சித்தருக்கன்புபூண்ட சித்தருமுறுவலெய்தி...... ... ...*
நித்திலத்தொளிபோன்மின்னு நீறுஞ்சாந்தும்பூசிப் ...*
பத்தருக்கேவல்செய்வார் பதமலர்முடியிற்சூட்டி.........*
முத்தமிழ்ப்பொருனைநாடன் முன்புசென் றருகுநின்றார்...*

(இ-ள்) சித்துவித்தைகாட்டிய கடவுளிடத்திலே அன்புவைத்த சித்தத்தையுடைய திருவாதவூரரும் புன்சிரிப்புக்கொண்டு முத்துப்பிரகாசத்தைப்போல பிரகாசியாநின்ற திருமேனியிலே திருநீறாகிய சந்தனத்தைப்பூசி அடியவர்களுக் கேவல்செய்வாராகிய கடவுளுடைய பாதாரவிந்தங்களைச் சிரசிலேவைத்துக்கொண்டு இயலிசைநாடகமென்னு முத்தமிழையும் வளர்க்கின்ற பொருனை நாடனாகிய பாண்டியராஜன் முன்னேபோய்ப் பக்கத்திலேநின்றாரென்றவாறு. (ருகூ)

மூட்டெழுமழல்போல்மன்னன் முனிவுடைமுகத்தனாகி *
யீட்டுநம்பொருள்களெல்லா மிரப்பவர்தமக்குநல்கி......*
நாட்டுளநரிகளெல்லா நற்பரியாக்கிநம் முன்...............*
காட்டினரிவர்செய்மாயங் கண்டிரோவமைச்சிரென்றான். *

(இ-ள்) மூண்டெழுகின்ற தீயைப்போல் பாண்டியராஜனவன் கோபத்தையுடைய முகத்தினனாகச்சொல்லுவான் இவர் நாம்சம்பாதித்த திரவியங்களெல்லாம் யாசகர்களுக்குக்கொடுத்துவிட்டு நாட்டிலேயிருக்கின்ற நரிகளையெல்லாம் நல்லகுதிரைக்கூட்டங்களாக்கி நம்முன்னே யழைப்பித்துக் காண்பித்தார் இந்த மாயத்தைக்கண்டீர்களோ மந்திரிகளேயென்றானென்றவாறு. (சுய)

தன்றொழில்வழுவினோர்க டமக்குறுதுயரஞ்செய்தல் ...*
வன்றிறலரசர்நீதி யாயினுமறைவல்லாளர்... ... ... *
சென்றுயர்தவத்தினிற்போர் தெரிவையர்விருத்தர்பால...*
ரென்றிவர்க்குறுகண்செய்த லெம்மனோரியல்பன்றென்றா*

(இ-ள்) பின்னும் பாண்டியராஜனவன் தன்னுடைய தொழிலிலே தப்பினவர்களுக்கு மிகுந்ததுன்பத்தைச்செய்வது வன்மைபொருந்திய சௌரியத்தையுடைய அரசர்களது நீதியாயினும் வேதத்தில் வல்லபிராமணர்கள் உயர்ந்த தவமார்க்கத்திலே நிற்பவர்கள் மாதர்கள் விருத்தர்கள் பாலர்கள் என்றுசொல்லப்பட்ட இவர்களுக்குத் தண்டஞ்செய்வது நம்போல்வார்களுக்கு இயற்கையல்லவென்றுசொல்லி யென்றவாறு. (சுக)

தண்டல்செய்வர்களுளர் தங்களைநோக்கிநங்கள்.........*
கண்டிடபுன்னிலாமற் கடிதினிலிவர்க்கொண்டேகி......*
மண்டமல்வெயிலினூடு வளைப்பினினிருத்திநம்பாற்......*
கொண்டனதனங்களெல்லாங் குறைவறவாங்குமென்றான்...*

(இ-ள்) கொடுமையையுடைய தண்டற்காரர்களைப்பார்த்து இவனைநம்முடைய கண்பார்க்க எதிரேநில்லாமல் சீக்கிரத்திலே கொண்டுபோய் நெருங்கிய தீயையொத்த வெயிலினிடத்திலே ஒருகோலேழித்து அதிலேநிறுத்தி நம்மிடத்திலேவாங்கிய திரவியங்களையெல்லாம் குறைவில்லாமல் வாங்குங்கோளென்றான் பாண்டியராஜன்-எ-று. (௬௨)

வன்றிறலேவலாளர் மற்றவர்தமைக்கொண்டேகி.............*
யொன்றியவளைப்பினூடு நிறுத்தலுமுலகோர்போற்று.....*
நன்றிகொள்வாதவூரர் நரியெலாம்பரிகளாக்கித்..........*
தென்றிசைநிருபர்க்கீந்த சிந்தனைநினைந்துசொல்வார்.....*

(இ-ள்) வலியசௌரியத்தையுடைய தண்டற்காரர் அவரைக்கொண்டுபோய்க் கோலேழித்து அதிலேநிறுத்தினார்கள் - அப்போது உலகத்தார் வணங்குகின்ற நம்மையைக்கொண்ட திருவாதவூரர் நரிகளையெல்லாங்குதிரைகளாக்கித் தென்னாடரசனாகிய பாண்டியனுக்குக்கொடுத்த சிந்தனை நினைந்து சொல்லுவார்-எ-று. (௬௩)

தொல்லையோரிருவர்தேடுஞ் சோதியேயாதுசெய்வேன்... *
தில்லையோர்பரவநின்ற தெய்வமேயாதுசெய்வே............*
னில்லையோகருணைநின்பா லென்றனையடிமைகொண்டா..*
யல்லையோதமியேனின்ன லறிதியோவறிந்திலாயோ.......*

(இ-ள்) மூற்காலத்திலே பிரமாவிஷ்ணுக்கள்தேடிய சோதிசொரூபனே நானென்னசெய்வேன் தில்லைமூவாயிரவர் வணங்கும்படி நின்றதெய்வமே நானென்னசெய்வேன் உன்னிடத்திற் கிருபையில்லையோ என்னையடிமைகொண்டவனீயல்லையோ என்னுடைய துன்பத்தையறிந்தாயோ அறிகிலாயோவென்று சொன்னவாறு. (௬௪)

பரித்திரணரியேயான பான்மைகண்டடியேன்றன்னை......*
வருத்தினரிதனைமாற்ற வல்லநீ டாற்றாயாகிற்...............*
றரித்தனைவிடத்தையென்னுந் தன்மையும்புரங்கண்மூன்று*
மெரித்ததுமில்லாதென்றென் றிரங்கினரெவர்க்குமிக்கார்...*

(இ-ள்) குதிரைக்கூட்டங்கள் நரிகளான தன்மையைக்கண்டு அடியேனைவருத்தினார்கள் இதனை நீக்கத்தக்க நீ நீக்கமாட்டாயானால் விஷத்தைக் கண்டத்திற்றரித்தாயென்னும் தன்மையும்திரிபுரங்களை மூன்றுமெரித்த

தும் இல்லையாமென்று இரங்கினர் எவரினுமிருந்தவராகிய திருவாதவூரரென்றவாறு. (௩௫)

நன்றிகொள்கடவுட்கங்கை நதியினைவையையூடே.........*
சென்றுமிழில்வாதவூரர் பேரிடர்தீரென்றேவி... ....*
யன்றொருமடந்தைக்காளா யடியவர்க்கெளியார்கொன்றை *
துன்றியமுடியின்மேன்மண்சுமந்ததையுரைத்தல்செய்வாம்*

(இ-ள்) நன்மையைக்கொண்ட தெய்வகங்கையைப்பார்த்து வையைநதியிலேபோய்அழகியதிருவாதவூரருடையபெரியதுன்பத்தை நீக்கென்று அனுப்பி அப்பாது ஒருபிட்டும்வாணிச்சிக்குக் கூலியாளாய் அடியவர்களுக்கு எளியராகிய பரமசிவன் கொன்றைமலர் நெருங்கிய சிரசின்மேலே மண்சுமந்தகதையைச் சொல்லுவாமென்றவாறு. (௩௬)

குதிரையிட்டசருக்கம்- முற்றிற்று.

ஆகதிருவிருத்தம் - உ௱௪௮.

மண்சுமந்த சருக்கம்.

தங்கியவருளின்மிக்கார் தாம்படுமிம்பையுன்னி...........*
யங்கணரவர்பாலுற்ற வருந்துயரகற்றுகென்று ....*
கங்கையைவிடுப்பவேகிக் கடும்பெருக்கெடுத்துவையைப்...*
பொங்கலைப்புனலாயெங்கும் பரண்டதுபுணரியேபோல்... *

(இ-ள்) தங்குகின்ற கிருபையிலேயிருந்தவராகிய திருவாதவூரர் படுகின்ற துன்பத்தை நினைத்து பரமசிவனவரிடத்திலே வந்த அரிய துன்பத்தை நீக்குவாயென்று கங்காநதியையேவ அதுகடியபெருக்கெடுத்து வையைநதியிலேசேர்ந்து மிகுந்தசலப்பிரவாகமாய் எங்கும் பரண்டதுசமுத்திரம்போலென்றவாறு. (௧)

சேர்ந்தவெண்முத்தவாரல் செய்துநீர்க்கலைமேலார்த்து ...*
காந்தளஞ்செங்கைவீசிக்கனதனக்குரும்பைகாட்டி..........*
மாந்தளிர்ப்பதங்கண்மீதுவருதிரைஞெகிழமார்ப்பப்.......*
போந்துளகணிகைமாதர்ப் போன்றதுவையையாறு... ...*

(இ-ள்) வெண்மைபொருந்திய முத்தமாகிய பற்களாற்சிரித்து நீராகிய வஸ்திரத்தை மேலே கட்டிக்கொண்டு காந்தளாகிய சிவந்தகையை வீசி கனம்பொருந்திய தனமாகிய குரும்பைகளைக்காட்டி மாந்தளிராகிய பத

ங்களின்மேலே வருகின்ற அலையென்னுஞ் சிலம்புகள்சத்திக்கநடக்கின்ற வேசைமாதரை நிகர்த்தது வையைநதி என்றவாறு. (௨)

திரைப்பெருமருப்பினாலே செழுங்கரையிருபாற்குத்தி...*
மரத்திரண்முறித்துச்சாலி வயலெலாமழித்துவாயா... ...*
னுரைத்திரள்சிந்திமீதே நுண்மணலிறைத்துவண்டு... ...*
நிரைத்தலின்மதத்தவேழ நிகர்த்தது வையையாறு........*

(இ-ள்) அலையாகிய பெரியகொம்பினாலே செழுமைபொருந்திய இரண்டுபக்கத்துக் கரைகளையுங்குத்தி மரக்கூட்டங்களை முறித்து நெற்பயிர்களையுடைய கழனிகளையெல்லாமழித்து வாயினாலே நுரைக்கூட்டங்களைச்சிந்தி நொய்மணலை மேலேயிறைத்து வண்டுகள் வரிசையாக மொய்க்கவருதலால் மதத்தையுடைய யானையை யொத்தது வையைநதி யென்றவாறு. (௩)

மைத்திகழ்குழலாளந்த மலைமகண்முலையிற்றோய........*
வத்தனைவருத்துமேன்மையனகவாயுதமென்றெண்ணி.....*
யொத்தெழுந்தொளிருங்கன்ன லுயங்குசெங்கழுநீர்கஞ்சம்*
புத்தவையழிக்கவேண்டிப் புரண்டதுபழனமெல்லாம் ...*

(இ-ள்.) மையைப்போலப் பிரகாசிக்கின்ற கூந்தலையுடைய அழகிய பார்வதியினது ஸ்தனபாரங்களிற் கூடும்படிக்குப் பரமசிவனை வருத்துகின்ற மேன்மைபொருந்திய மன்மதனுடைய ஆயுதங்களென்று நினைத்து ஒரோராசியாய் எழுந்து பிரகாசிக்கின்ற கரும்புகளையும் விளங்குகின்றசெங்கழுநீர்மலரையும் தாமரைமலரையும் இன்னும் புதியவாயுள்ள பலமலரையும் அழிக்கவேண்டிய வயல்களின்மேல்விழுந்து புரண்டது வையையாறென்றவாறு. (௪)

வடம்படைத்துடையபார வனமுலைமுகத்துமாத........*
ரிடுந்துகில்கடுகிவீழ்வ தென்னநின்றழகுசெய்து........*
தடம்படக்கிடந்ததெங்கின்றயங்குசெங்குரும்பைமீது..*
நெடும்புனற்றிரைபோய்மீளநிவந்ததுவையையாறு ....*

(இ-ள்) முத்துமாலையைத் தரித்துள்ள அழகிய தனபாரத்தின்மேல் மங்கையர்கள்தரிக்கின்றவஸ்திரஞ்சீக்கிரத்தில் வீழ்வதுபோலநின்று அழகினைச்செய்து விசாலமாகவிருக்கின்ற தென்னமரத்தில் விளங்குகின்ற சிவந்த குரும்பையின்மேல் நெடிய தீர்த்திரைகள்வீசி மீளப்பெருகியதுவையைநதி என்றவாறு. (௫)

மீதெழுபரிதிகையால் விடுங்கனல்வெம்மைதீரப்.........*
பூதலமடவார்போர்க்கும் புதியவெண்டுகிலேபோல.......*

யாதலர்ப்பழனஞ்சோலை யாதெனப்பரந்துசஞ்ச.........*
மாறுமைமதுரைமூதூர்மதிற்புறஞ்சென்றுசேர்ந்து.....*

(இ-ள்) ஆகாசத்திலெழுகின்ற சூரியனானவன் தன்கிரணங்களென்னுங் கைகளால்விடுகின்ற வெப்பம் நீங்கப் பூமிதேவியானவள் போர்த்துக் கொள்கின்ற புதுமை பொருந்திய வெள்ளை வஸ்திரம்போல் மலையாயுடைய கழனியெது சோலையெதுவென்று சொல்லப்பரவித் தாமரைப் பூவிலிருக்கின்ற லட்சுமியானவள் வசிக்கின்ற மதுரைமாநகரத்து மதிற்புறத்தே வெள்ளம்வந்து சூழ்ந்தது என்றவாறு. (௬)

தாங்கியதுவசவாயிற் றடமதிலிடியத்தள்ளி..................*
யாங்கெழின்மதுரைமூதூ ரழிப்பதுபோன்றுசெல்லப்...*
பாங்குளவிடங்களெலலாம்பரந்ததுவையைநன்னீ........*
ரீங்கெதுசெய்வமென்று யாவருங்கவற்சிகொண்டார்......*

(இ-ள்) தாங்கப்பெற்ற கொடிகள்கட்டிய கோபுரவாயிலையுடைய விசாலமாகிய மதிலையிடியும்படித்தள்ளி மதுராபுரிபட்டணத்தை யழிப்பதையொத்துச்செல்லப் பக்கங்களிலேயுள்ள இடங்களெல்லாம் வையைநீரானது பரவிவந்தது அதுகண்டு இவ்விடத்திலே யாமென்னசெய்வோமென்று எல்லாருங்கவலைகொண்டார்கள் என்றவாறு. (௭)

மைக்கருங்களிற்றுத்தானை வழுதியுங்கடிதுவந்து.........*
தொக்கபொன்மலருமுத்துந் துகின்மணிப்பூணுநல்கித்...*
தக்கவண்புவியிலுள்ளோர்தமக்குயிரொன்னுமன்னே......*
மிக்கநின்கோபமாறல்வேண்டுமென்றிறைஞ்சிநின்றான்... *

(இ-ள்) வேகத்தையுடைய கறுத்தயானைபோன்ற சேனைகளையுடைய பாண்டியராஜனும் சீக்கிரத்திலேவந்து நெருங்கிய பொன்னும் பூவும் முத்தும் வஸ்திரமும் ரத்தினாபரணமும் அந்தவையையாற்றிலேவிட்டுத் தகுந்த பூலோகத்தாருக்கு உயிரொக்கிறதாயே உன்னுடைய மிகுந்த கோபமாறுதல் வேண்டுமென்று வணங்கிநின்றானென்றவாறு. (௮)

கலைமதிக்குலத்துமன்னன் கன்னிநன்னாடன்கூறுந்...............*
தலைமைமிக்குடையசொல்லாற்றன்முனிவொழிதலின்றி.........*
மலையெனத்திரைகண்மேன்மேல்வருதல்கண்டிதுவென்னென்று*
நிலையுறச்சிந்தையுள்ளே நேடினனேடிப்பின்னர்..................*

(இ-ள்) சந்திரகுலத்துமன்னவனுங் கன்னிநாடனுமாகிய பாண்டியன்வேண்டிக்கொள்ளுந் தலைமைப்பாட்டை மிகவுமுடைய சொல்லினாலே வையைநதியானது தன்னுடையகோபம்நீங்காமல் மலையைப்போல்

அலைகள் மேலுமேலும்வருதல்கண்டு இதுஎன்னவென்றுநிச்சயந்தெரிய மனதுக்குள்ளே ஆலோசித்தான் அப்படி ஆலோசித்தபின்-எ-று. (௯)

ஆதியாங்கடவுளெந்தை யாலவாயமலன்மங்கை ... ... *
பாதியான்சிறந்தபூசை பண்ணடையிற் குறைந்ததுண்டோ...*
நீதியாந்தவத்தின்மிக்கார் நெஞ்சகம்புழுங்கமண்மேற்... *
தீதியாஞ்செய்ததுண்டோ செப்புமினமைச்சிரென்றான். *

(இ-ள்) யாவர்க்கும் முதற்கடவுளாயும் எனது பிதாவாயும் திருவாலவாயிலிருக்கும் அமலனும் உமாதேவிபாகனுமாகிய பரமசிவனுக்கு முன்சென்மத்திலே யான்செய்யும் பூசையிலே குறைவுபட்டதுண்டோ? நீதிநிறைந்த தவத்திலேமிகுந்த பெரியோர்களுடைய மனம்புழுங்கும்படி பூமியிலேயான் தீங்குசெய்ததுண்டோ? சொல்லுங்கள் மந்திரிகளேயென்றான் பாண்டியராஜனென்றவாறு. (௰)

விளங்கிளமதிசேர்சென்னி வித்தகர்பத்தரான ... ... *
வளந்திகழ்வாதவூரர் வருந்தியவலைப்பினீக்கி ... . *
யுளங்கொளமகிழ்ச்சிசெய்யி லுறுபுனலூர்கொளாதென் *
றளந்தறிவறிந்துகூறி யாங்கவர் தொழுதுநின்றார்... ...*

(இ-ள்) பிரகாசிக்கின்ற மூன்றாம்பிறையைத்தரித்த சிரசையுடையபரமசிவனுக்கு அடியாரான வளம்பொருந்திய மாணிக்கவாசகரை வருத்தப்படுத்துகின்ற கோட்டிநின்று நீக்கி அவருக்கு மனமகிழும்படி செய்விதால்மிகுந்த இந்தநீர் ஊரையடித்துக் கொண்டுபோகாதென்று ஆலோசித்துச்சொல்லிப் பாண்டியனைத் தொழுதுநின்றார்கள் மந்திரிகள்-எ-று.

மன்னனுமவர்கடம்மேன் மகிழ்ந்தருட்பார்வைநல்கி ... *
யென்னுளமதித்தவாறின் றிங்கினிதுரைத்தீரென்று ... *
கொன்னுறுவலைப்பினூடு நிற்குநற்குணத்தினானை... ...*
முன்னுறவழைத்துநண்பான் முகமலர்ந்திதுமொழிந்தான்.*

(இ-ள்) பாண்டியராஜனும் அப்படி சொன்னவர்களிடத்து மனமகிழ்ந்து கிருபாநோக்கஞ்செய்து என்மனத்தில் நினைத்தப்பிரகாரமேஇன்று இங்கே இனிதாகச்சொன்னீர்களென்றுசொல்லி அச்சத்தைத் தருகின்ற வலைப்பினிடத்திலே இருக்கின்ற நற்குணத்தையுடைய மாணிக்கவாசகரைத் தம்முன்னே யழைப்பித்து சினேகத்தால் முகமலர்ச்சியடைந்து இந்தவார்த்தைசொன்னானென்றவாறு. (௰௨)

பாம்பணிசெய்யவேணிப் பரம்பரனடியார்கைமே... ...*
லாம்பொருணமதேயாகு மறம்பிறர்க்காவதுண்டோ ... *

தேம்பூமாலைக்கண்மார்பீர் செயலிதற்குமதுமேனி... ...*
சாம்புவதவமேயான்செய் தண்டமேதகவிலாமை... ... *

(இ-ள்) சர்ப்பத்தையணிந்த சிவந்த ஜடாபாரத்தையுடைய பரமசிவ னடியார்கள் கையிலே நீர் கொடுத்தபொருள் நம்மதேயானால் தருமம் பிறருக்குப்போகுமோ வாசனைபொருந்திய மாலையையணிந்த மார்பினை யுடைய மாணிக்கவாசகரே இந்தக்காரியத்திற்கு உமது திருமேனி வருந் துவது விருதாவே இதற்கு யான் தண்டித்தல்செய்தது அறிவிலாமையா மென்றவாறு. (௰௩)

உற்றவித்தகைமைமுன்னே யுணருமிவ்வுணர்வில்லாமை...*
குற்றமித்தனையுநம்மேற் கொண்டனங்குறைவிலாமல்... *
மற்றினிப்புகலுமாறென் வையைநம்மூர்கொளாமல்... ...*
நற்றவத்தலைவர்நீரே யடைப்பியுமெனநவின்றான்...... *

(இ-ள்) வந்தயிந்தக்காரியங்களை முன்னதாக அறியுமறிவில்லாமையாகிய குற்றத்தை நம்மதாகக் கொண்டோம் குறைவில்லாமல் இனி நான் சொல் வதென்னவென்றால், வையைநதி நம்முடைய மதுராமாநகரையழியாமல் நன்மையாகிய தவத்திலே தலைவராகிய நீரே அதைத்தடைசெய்யுமென்று சொன்னான் பாண்டியராஜன்-எ-று. (௰௪)

அருட்பெருவழுதியிவ்வா றன்புரைபகர்ந்தபோதுந்... ...*
தரிப்பரிதென்னமுன்னந் தழலெனவெகுண்டபோதும்...*
விருப்பொடுவெறுப்புமில்லா மெய்ம்மையார்தம்மையாண்ட
திருப்பதநினைந்தார்வையைச்செழும்புனலூர்கொளாமல்...*

(இ-ள்) கிருபையையுடைய பெரியபாண்டியராசனானவன் இந்தப்பிர காரம் பத்தியானவசனஞ் சொன்னபோதும் ஒருவராலுந் தாங்குதற்கரி தென்று சொல்லும்படி முன்பு அக்கினியைப்போல் கோபித்தபோதும் விருப்பும் வெறுப்புமில்லாத மனத்தினையுடைய மாணிக்கவாசகர் தம்மை யாட்கொண்ட பரமசிவனுடையதிருவடியைநினைத்தார்-வையைநீரானது மதுராபுரியை யடித்துக்கொண்டுபோகாமல்-எ-று (௰௫)

சுந்தரப்பரிமேல்வந்த தோற்றமேமனத்திலுன்னி... ......*
யந்தரத்திறைஞ்சநன்னீ ரடங்கியுள்வாங்கிச்செல்ல........*
வெந்துயர்ப்பிறவியான விடக்கிளர்வேலைநீந்தி............*
வந்தருட்கரையிற்சேர்வார் வையையங்கரையிற்சென்றார்...*

(இ-ள்) அழகிய குதிரையின்மேல்வந்த காட்சியையே மனதில் நினை த்து ஆகாயத்திலேவணங்க நல்ல நீரானது அடங்கி யுள்வாங்கிப்போக வெப்பம்பொருந்திய - துயரைச் செய்கின்ற பிறவியாகிய விஷத்தை

யுடைய கடலைநீந்திவந்து கிருபையாகிய கரையிலேசேர்க்கப்பட்ட மாணிக் கவாசகர் வையைநதிக்கரையில் வந்தார்-எ-று. (௰௭)

முறைமுறைவணங்கிநின்ற வாரியர்முகத்தைநோக்கி... ...*
யறைதிரைநெடுநீர்வையை யடைப்பதுகடிதில்வேண்டு ...*
முறையுமிம்மாந்தரெல்லா மொல்லையிலவம்மினென்று ...*
பறையறைவித்துநம்மூர்க் கிவ்வுரைபரப்புமென்றார்... ..*

(இ-ள்) கிரமப்படி வணக்கஞ்செய்துநின்ற தூதர்களுடைய முகத் தைப்பார்த்துச் சத்திக்கின்ற அலையையுடைய நெடியநீர்சூழ்ந்த வையை நதியைச் சீக்கிரத்தில் அணைசெய்யல்வேண்டும் வசிக்கின்ற இந்த மனிதர் களையெல்லாம் சீக்கிரத்தில்வாருங்களென்று முரசறைவித்து நம்முடைய ஊருக்குஇந்தச்சொல்லைத்தெரிவியுங்கோளென்றார்மாணிக்கவாசகர்-எ-று.

ஆரியர்கடிதினோடி வன்பறையறைவித்தம்பொற்...... ...*
றேரியல்வீதிதோறுஞ் சென்றுரைபரப்புமுன்னே... ...*
கூரியகொட்டுமண்சேர் கூடையுங்கொண்டுவையை...... *
நீரியல்கரைமேல்வந்து நின்றனர்மதுரைமாந்தர்...........*

(இ-ள்) அப்படியே தூதர்கள் சீக்கிரத்திலோடி வலிய பறையறைவித் து அழகிய பொன்மயமாகிய இரதங்கள்நடக்கின்ற தெருக்கள்தோறும் போயிதனைச் சொல்லுதற்குமுன்னமே கூர்மைபொருந்திய மண்வெட் டியும் மண்ணெடுக்குங் கூடையுங்கொண்டு நீர்பெருகிய வையைநதிக் கரையிலே வந்துநின்றார்கள் மதுரையிலுள்ள மனிதர்களென்றவாறு. ()

நீறுகொண்டிலங்குமேனி மறையவர்நியமஞ்செய்த.........*
வீறுகொண்டிடங்கடோறு மாரியர்விரைந்துசென்று......*
கூறுகொண்டெவர்க்கும்வேறு கோலலறையளந்துசெங்கை *
மாறுகொண்டுறுக்கிவையை வன்கரையடைக்கலுற்றார்... *

(இ-ள்) விபூதியைத்தரித்து விளங்குகின்ற திருமேனியையுடைய மா ணிக்கவாசகரானவர் நியமித்த அதிகாரத்தைக்கொண்டு இடங்கள்தோறும் தூதர்கள் சீக்கிரத்திற்போய் எப்படிப்பட்டவர்களுக்கும் அளவுகோலால் வேறுவேறளந்துவிட்டுச் சிவந்தகையிலே ஒரு மாறுகொண்டு அடித்து வையைநதிக்கரையை அடைக்கத்தொடங்கினார்களென்றவாறு. (௰௯)

கண்பெறுகழையின்முத்துங் கடகரிமருப்பின்முத்தும் ...*
வெண்பணிநிலத்தின்முத்து மேதகுகரும்பின்முத்தும்... *

வண்புனற்றிரைகள்வீச வரையெனக்குவைகள்செய்து ...*
பண்படப்பொருந்தநீருட் பதித்துயர்வரப்புசெய்வார் ...*

(இ-ள்) சுணுக்களுடைய மூங்கிலிற்பிறந்த முத்துக்களையும், மதத்தையுடைய யானைக்கொம்பிற்பிறந்த மூத்துக்களையும், வெள்ளிய சங்கிற்பிறந்த முத்துக்களையும், மேன்மையாகிய கரும்பிற்பிறந்த முத்துக்களையும், வன்மைபொருந்திய நீர்த்திரைகள் கொண்டுவந்து ஒதுக்க அவைகளை மலைகளென்னும்படிக் குவித்துத் தகுதியாகப்பொருந்த நீரிலே பதியத்தள்ளி உயர்ந்தகரைசெய்வார்களென்றவாறு. (உ௬)

பரித்திரணிறுத்துமென்பார் பாம்புகளுருட்டுமென்பார் . *
திரைப்புனன்மிகுத்ததென்பார் தேவர்கட்பயமென்பார் *
நிரைப்படுமகிலோடார மவரவரொதுக்கிநீடு............*
வரைப்பிடைக்குவித்துநிற்பா ராயினர்மதுரையுள்ளார்.. ...*

(இ-ள்) குதிரைப்பாச்சலை மரங்களை நிறுத்துமென்பார்கள் வலக்கோலாற்செய்யும் பாம்புத்திரைகளை உருட்டித்தள்ளுமென்பார்கள் அலையையுடையநீர் அதிகரித்ததென்பார்கள் அதற்குப்பயந்து யாம் தேவர்களுக்கு அடைக்கலமென்பார்கள் வரிசைப்படுகின்ற அகிற்கட்டைகளுடனே சந்தனக்கட்டைகளும் அடித்துக்கொண்டு வருதலைப்பார்த்து அங்குள்ளவர்கள் நெடிதாகிய ஓரிடத்திலே குவித்துநிற்பார்கள் இத்தன்மையுடையவராணர்கள் மதுரைமாநகரத்திலுள்ளாரென்றவாறு, (உ௭)

எருடைப்புதுநீர்வையை யிவ்வகையடக்குமெல்லை .. ..*
நீருடைப்பொலிந்தசென்னி நின்மலர்க்கன்புமிக்காள்......*
சீருடைத்தவத்தினிற்பாள் செம்மனச்செல்வியென்னும் .. *
பேருடைநரைமூதாட்டி பிட்டுவிற்றுணவுகொள்வாள்.. ...*

(இ-ள்) அழகினையுடைய புதுமைகொண்ட பிரவாகமிருந்த வையைநதிப்பெருக்கை இத்தப்பிரகாரம் அணைசெய்யும்போது கங்கையைத்தரித்த பிரகாசம்பொருந்திய சிரசையுடைய பரமசிவனிடத்தில்அன்புநிறைந்தவளும் சிறப்பையுடைய தவத்திலே நிற்பவளுமாய்ச் செம்மனச்செல்வியென்னும் பெயரையுடைய நரைத்த ஒரு கிழவியானவள் பிட்டுவிற்பனைசெய்து ஜீவனஞ்செய்துவருபவள்-எ-று. (உ௮)

ஆங்கவட்களர்துநீக்குங் கோலறையடைப்பதின்றி.........*
யோங்கலைப்புதுநீர்வையை யுடைப்பினையடைக்குமெல்லை *
தீங்குளதறுகளுளர் சென்றதற்குறுகண்செய்ய...... .. ...*
வீங்கெமக்குறுதியாவா ரியாவரோவென்றிரங்கி...... ......*

(இ-ள்) அவ்விடத்தில் அந்தப் பிட்டுவாணிச்சிக்குஅளவுசெய்து நீக்கிய பங்குமாத்திரம் அடையாமல் அலைகளையுடைய புதிய நீரமிகுந்த வையை நதிக்கரையெல்லாம் அடைக்கும்போது அதைப்பார்த்து கொடுமையுள்ள தூதர்கள்வருத்தப்படத் துன்பஞ்செய்ய அந்த அம்மையானவள் பயந்து இவ்விடத்திலே எனக்குறுதியாய்வந்து இந்தப்பங்கை அடைப்பவர்கள் யாரோவென்று இரக்கமடைந்து-எ-று. (௨௩)

பிட்டினைக்கூலிகொண்டு பெருங்கரையடைப்பாரின்றி......*
நெட்டிலைச்சூலமேந்து நின்மலன்கோயிலெய்தி...... ... *
மட்டறத்தளர்ந்தகொங்கை மார்பினிற்கண்ணீர்வார... ... *
வெட்டுருத்திரண்டபாத மிறைஞ்சிநின்றிதனைக்கூறும்......*

(இ-ள்) பிட்டினைக்கூலியாக வாங்கிக்கொண்டு பெரியகரையை யடைப்பவ ரொருவருமில்லாமல் நெடிய யிலைகளையுடைய சூலாயுதத்தை யேந்தப்பட்ட சொக்கநாயகரது கோயிற்குப்போய் அளவுகடந்து தளர்ந்து சாய்ந்த கொங்கைகளையுடைய மார்பிலே கண்ணீரொழுக அவ்விடமூர்த்தியாயிருந்த அவருடைய திருவடியை வணங்கிநின்று இதைச்சொல்லுவா ளென்றவாறு. (௨௪)

[வேறு.]

நெட்டரவக்கச்சுடையாய்நீலநிறத்திருமாதின்...... ....*
வட்டமுலைத்தழும்புபடவந்தணையுந்திருமார்பா..... ....*
கட்டியசெஞ்சடையாயுன்கண்ணருள்கொண்டெப்பொழுதும்...*
பிட்டினைவிற்றுண்பார்க்கும்பேரிடும்பையுளதாமோ... ......*

(இ-ள்) நெடிய சர்ப்பக்கச்சை யுடையவனே கரியநிறத்தையுடைய காமாட்சியினது வட்டமாகிய முலைத்தழும்புபடவந்து அணைந்த அழகிய மார்பையுடையவனே, கட்டப்பட்ட சிவந்த ஜடாபாரத்தை யுடையவனே, உன்னுடைய கிருபாநோக்கத்தைக்கொண்டு எப்போதும் பிட்டினைவிற்று உண்ணப்பட்ட எனக்கும்பெரியதுக்கமுண்டாமோவென்றா ளென்றவாறு. (௨௫)

யாருடனினிப்புகல்வேனென்னுடையாய்வையையினன் *
னீருடையாதடைக்கும்வகைநீசிறிதின்றருளாயேல்........*
சீருடையாயுனக்கடிமைசெய்யுமவர்க்கெளியையெனும் ...*
பேருடையாயெனப்பலரும்பேசுமொழிபழுதாமோ......*

(இ-ள்) இனியாரோடு யான்சொல்லுவேன் என்னை யடிமையாகவுடையவனே? வையைநதி நீருடைத்துக்கொண்டு போகாமல் அடைக்கும்படி நீ இன்றுகொஞ்சங் கிருபைசெய்யாயானால் சிறப்பையுடைய கடவு

னோ? உனக்கடிமைசெய்யும் அடியவர்களுக்கு எளியையென்னும் பெயருடையவனென்று பலரும் பேசுகின்றசொல் பழுதாகுமோ-எ-று. ()

தாயுமிலைதந்தையிலைதமருமிலைதமியேனைப்.........*
பேயினுடனின்றாலும்பிரித்தறியவொண்ணாது.........*
நீயதென்னிலம்பாடென்சிந்தையில்வெந்துயர்தீர.........*
நீயருளாயாயினுயிர்நீப்பேன்மற்றென்செய்கேன்.........*

(இ-ள்) எனக்கு மாதாவுமில்லை, பிதாவுமில்லை, ஞாதிகளுமில்லை, தனியேனாகிய என்னைப் பேயுடனேகூட நின்றாலும் அதினின்று வேறுபிரித்தறியக்கூடாது என்னுடைய தரித்திரமானது நீயதாயிருக்கின்றது என் மனதிலிருக்கின்ற வெவ்விய துக்கம் நீங்கும்படி நீ கிருபைசெய்யாயானால் உயிரைநீக்கிக்கொள்ளுவேன் பின்னென்னசெய்வேனென்றுளென்றவாறு.

(வேறு.)

இன்றெனக்குறுதியாகி நானிடும்பிட்டுவாங்கி.........*
வன்றிறற்கூலியாளாய் வன்கரையடைப்பாரில்லை.........*
யுன்றனக்கபயம்யானென்றுரைப்பவடன்மேலன்பு.........*
சென்றவட்காளாமாறு துணிந்தனர்தேவதேவர்.........*

(இ-ள்.) இன்றைக்கு எனக்கு உறுதியாய் நான் கொடுக்கப்பட்ட பிட்டினைவாங்கிக்கொண்டு மிகுந்தவலிமையுள்ள கூலியாளாய்வந்து மேலாகிய வையையாற்றங்கரையை அடைப்பாரில்லை உனக்கடைக்கலம் யானென்று முறையிடுகின்ற பிட்டுவாணிச்சியின்மேல் அன்புவைத்து அவளுக்குஆளாகும்படி துணிவுகொண்டார் தேவதேவராகியசொக்கநாயகரென்றவாறு. ()

ஆடையுந்துணிந்தசீரையாகியேகூலியாளாய்.........*
கூடையுந்தலைமேற்கொண்டு கொட்டுடைத்தோளராகிப்...*
பீடைகொண்டடாவாள்காணப்பெரும்பசியுடையார்போல*
வேடைகொண்டோலைவந்தார் வேண்டியவடிவங்கொள்வார்

(இ-ள்) துண்டாய்க்கிழிந்த வஸ்திரத்தையுடையவராயும், கூலிகொண்டு வேலைசெய்யும்ஆளாயும், கூடைகவிழ்த்ததலையையும், மண்வெட்டியைக்கொண்டிருக்குந்தோளையுமுடையவராயுந்தன்பக்கை அடைத்ததற்கு ஒருவருமில்லாமையாலே துன்பங்கொண்டு ஆயாசப்படுகின்ற பிட்டுவாணிச்சியம்மைகாணும்படி அதிக பசியுடையவர்போல வேஷங்கொண்டு சீக்கிரத்தில்வந்தார் வேண்டியவடிவங்கொள்ளும் சொக்கநாயகர்- எ-று. (உகூ)

வந்தென்னையேவல்கொள்வாருளர்கொலோமற்றிங்கென்று...*
புந்தியின்மகிழ்ந்துகோயில் வாயிலிற்புகன்றபோது... ...*

லந்தரன்மொழியைக்கேளாதன்னைதன்னையர்ச்சிகூருஞ்... *
சிந்தனையொழிந்துகூலியாளனாச்சென்றுசேர்ந்தாள்...... *

(இ-ள்) இங்கேவந்து என்னை வேலைகொள்வாருண்டோ வென்று மனத்திலே மகிழ்ச்சிகொண்டு ஆலயத்தின் கோபுரவாயிலிலே நின்றுசொன்னார் அப்போது அந்த நல்லசொல்லைக்கேட்டுத் தாயாகியபிட்டுவாணிச்சியம்மையானவள் தன்னுடைய மனோவியாகூலத்தீர்ந்து கூலியாளாகிய கடவுளை அடுத்தாளென்றவாறு. (௫௰)

புடையின்மேனுலகோரின்றிப்புனைந்துளபுலித்தோலாடை *
யுடையின்மேலரைக்குங்கச்சாயோங்குநச்சுரகமின்றிச்... *
சடையின்மேன்மதியமின்றித்தாங்கியமழுமானின்றி... ... *
விடையின்மேலின்றிநின்றவெளியனைவெளியிற்கண்டாள். *

(இ-ள்) பக்கத்திலே முப்பத்துமுக்கோடி தேவர்களுமில்லாமல் தரித்திருக்கின்ற புலித்தோலாடையும், அதன்மேற்கட்டப்பட்ட கச்சாயோங்கிய சர்ப்பமுமில்லாமல், ஜடாபாரத்திலே சந்திரனுமில்லாமல் தாங்கப்பெற்ற மழுமானுமில்லாமல், இடபவாகனமுமில்லாமல்நின்ற சிதாகாசரூபத்தையுடைய கடவுளை வெளியிலே கண்டாள் பிட்டுவாணிச்சியம்மையென்றவாறு. (௫௧)

மைந்தநீயெனக்கிங்காளாய் வருகெனமுன்னர்கூலி .... *
தந்தியேல்வருவனென்று சாற்றலுநகரவிட்டோ... ...... *
திந்திவாரமுதம்போலு மினியபிட்டளிப்பேனல்ல... ... *
லந்திவாயிதனைவிற்றே யளிப்பனின்கூலியென்றாள்... ... *

(இ-ள்) கண்டவுடனே மகனே, நீ எனக்கு இங்கே ஆளாகிவரக்கடவாயென்றுசொல்ல, அதற்குக் கூலியாளானவர் முன்கூலிகொடுத்தியேயானால் வருவேனென்றுசொல்ல, அதற்கு அந்தஅம்மையிப்போது சாப்பிடுதற்குத்தேவாமிர்தம்போலும் இனிமையுள்ள இந்தப்பிட்டுத்தருவேன் அல்லது சாயங்காலத்தில் இந்தப்பிட்டினைவிற்று உன்கூலியைகொடுப்பேனென்றாளென்றவாறு. (௫௨)

இரும்பசியுடையேனன்னே யினியபிட்டளிப்பையாகிற்... *
குரம்புகொண்டடைப்பேன்யானேகோலமுறழுதுமென்ன
கரும்புரத்துகின்பேயிட்ட பிட்டினைக்கரத்தாலள்ளி... .. *
விருப்பியிக்கித்தனைக்கொள்வா யென்றனள்விருப்பமிக்கார் *

(இ-ள்) மிகுந்தபசியுடையேன் தாயே, யினிமையுள்ளபிட்டினைக்கொடுப்பாயானால் கோலாலளவுசெய்த உன்பங்குமுழுவதும் யானே அடைப்பேனென்றுசொல்லக் கரியபுரத்தையுடைய வஸ்திரத்திலேயிட்ட பிட்

டினைக் கையினால்எளி விருப்பம்வைத்து இங்கேயிதனைத் தின்னென்று சொன்னாள் அன்புமிகுந்த பிட்டுவாணிச்சியம்மை யென்றவாறு. (௫௫)

கூற்றநின்மலபாதர் குறைந்தணிக்கரியதோர் ... *
யேற்றிநிப்பிட்டுவாங்கி யின்புறவமுதுசெய்து ... ... *
மாற்றரும்பசியைபன்னோமாற்றினையினிப்போய்வையை *
யாற்றினிற்கூற்றிதுண்டா மருங்கரையடைப்பேனென்றார்.

(இ-ள்.) கூற்றுவனையுதைத்ததாமரைமலரையொத்ததிருவடிகளையுடைய பரமசிவனானவர் கொஞ்சத்துண்டாய்க் கருமையுள்ள கந்தையையேற்று இட்ட பிட்டினைவாங்கி இன்பமிகும்படி திருவமுதுசெய்து ஒருவராலும் நீக்குதற்கரிய பசியினைத் தாயே நீக்கினாய் இனிநான் வைகையாற்றுக்குப்போய் உன்பங்குக்குண்டான அரியகரையை அடைப்பேனென்றாரென்றவாறு. (௫௬)

நன்றுநன்றின்னுமன்னே நயந்துபிட்டளித்தல்வேண்டு ... *
மென்றுதற்றணிந்தசீரையேற்றதுநிறையவாங்கித் ... ... *
தின்றுநின்றலைநீர்வையைச்செழுங்கரையதனிற்சென்று ... *
குன்றெனுந்தவத்தாயுன்றன் கோலறைகாட்டுகென்றார் ... *

(இ-ள்) நல்லதுநல்லது இன்னமுந்தாயே, நயப்புடனே பிட்டினைக் கொடுக்கவேண்டுமென்றுசொல்லித் தமது துண்டுக்கந்தையை யேற்று, அதுநிறையவாங்கித் தின்றுநின்று அலையையுடையநீர்மிகுந்த செழுமையுள்ளவையைநதிக்கரையிலேவந்துமலைபோலும்உயர்ந்ததவத்தையுடைய அம்மே, உன்னுடையபங்கைக்காட்டென்றார்சொக்கநாயகரென்றவாறு.

மெய்த்தவம்புரிவார்தம்மின் விழுப்பமிக்குடையவன்னை ... *
யித்தடங்கரையைவல்லே யெம்பிநீயடைப்பாயென்னப் ... *
பைத்தவெம்பகுவாய்நாகம் பனிமதிப்பாதிகொன்றைக் ... *
கொத்துடன்முடிக்கவல்லார் கோலறையடைக்கலுற்றார் ... *

(இ-ள்) மெய்ம்மைபொருந்திய தவஞ்செய்பவருக்குள் நம்மைமிகுந்த பிட்டுவாணிச்சியம்மையானவள் இந்தவிசாலமாகிய கரையைச் சீக்கிரத்திலே தம்பி, நீ யடைப்பாயாகவென்று சொல்லப் படத்தையும் வெப்பம்பொருந்திய பிளந்தவாயையுமுடைய சர்ப்பத்தையுங் குளிர்ச்சிபொருந்திய அர்த்தசந்திரனையுங் கொன்றைமலர்க்கொத்துடனே சிரசிலே முடிக்கவல்லவராகிய சொக்கநாயகர் கோலாலளவுசெய்த பங்கு நிலத்தை அடைக்கத்தொடங்கினார்- எ-று. (௫௭)

பேர்ப்பர்மண்கூடைபெய்வர் பிறைமுடிமேற்சும்மாடு ... *
சேர்ப்பர்பின்சுமந்துவையைத் திண்கரைசொரிந்துமீள்வர் *
வேர்ப்பர்மெய்யிளைப்பார்போல மென்றுபிட்டிரசநாவிற் *
பார்ப்பரவ்வன்னைதன்மேற் பரிந்தருட்பார்வைசெய்வார்... *

(இ-ள்) மண்ணைவெட்டுவோர், கூடையிலேயிடுவார், மூன்றாம்பிறையைத்தரித்த சிரசின்மேற் சும்மாடுகோலிவைப்பார், பின்பு சுமந்து திண்ணிய வையைநதிக்கரையிலேசொரிந்து திரும்புவார், வேர்வையடைவார், திருமேனியிளைப்பார்போல் பிட்டினைமென்று நாவிலேசுவைபார்ப்பார், அந்த பிட்டுவாணிச்சியம்மைமேல் அன்புவைத்துக் கிருபாநோக்கஞ்செய்வார் கூலியாளாகிய சொக்கநாயகர்-எ-று. (கஎ)

பிட்டுநன்றென்றுகூறிப் பிறைமுடியசைப்பார்வேட... ... *
னிட்டமென்றசையிற்கால் வீசலுக்காயிதென்பார்........ *
கொட்டுடன்கவித்தகூடை கொண்டுநின்றாடல்செய்வார் .. *
வெட்டிமண்குவிப்பாரோடி விரைந்தடிபாய்ந்துமீள்வார் *

(இ-ள்) பிட்டு நன்றாயிருக்கின்றதென்றுசொல்லி மூன்றாம்பிறையைத் தரித்த சிரசை அசைப்பார், வேடர்குலத்தில்வந்த கண்ணப்பநாயனார் படைத்த மெல்லிய மாமிசத்தைக்காட்டிலும், பரமசிவனுக்கு இந்தப்பிட்டு மிகவும் இனிமையுள்ளதாகுமென்பார், மண்வெட்டியுடனே கவிழ்த்துக்கொண்டிருக்கின்ற கூடையையுங்கொண்டு கூத்தாடுவார், வெட்டிமண்ணைக்குவிப்பார், சீக்கிரத்திலே காலினாலேதாண்டித்திரும்புவார்-எ-று.

பரிவுடைமனத்தினாளும் பரமர்தஞ்செய்திகண்டு... ... ...*
கரையினையடைத்தல்வேண்டு மென்றுதங்கருமங்கூறு... .. *
றூரனுடைவழுதிதூதர் காண்பரோவுறுகண்செய்வா... .. *
ரிருவினையுடையேன்மற்றிங் கென்செய்வேனென நினைந்தாள்.

(இ-ள்) அன்புள்ள மனத்தினையுடைய பிட்டுவாணிச்சியம்மையும் கூலியாளாகவந்த சொக்கநாயகருடைய செய்தியைப்பார்த்து வையையாற்றின்கரையை யடைக்கவேண்டுமென்று தன்னுடையகாரியத்தைச் சொல்லமாட்டாதவளாய் வலிமையையுடைய பாண்டியராசனுடைய தூதர்கள் காண்பார்களேயானால் துன்பஞ்செய்வார்கள் இருவினைகளையுடைய நான் இதற்கு என்னசெய்வேனென்று நினைந்தாள்-எ-று. (கசு)

மற்றிவணிலைமைவெள்ளி மன்றுணின்றாடுகின்ற ....*
கொற்றவரறிந்துபின்னுங் கூடைமண்கரைமேலேற்றி......*
புற்றவிக்கரையையன்னே யொல்லையிலடைப்பேனின்னே *
சற்றிதற்கிரங்காதேயுன் றவவுடைமனையிலென்றார் ....*

(இ-ள்) இந்தப்பிட்டுவாணிச்சியம்மை தில்லைமையை வெள்ளியம்பலத்தி
லே நிருத்தஞ்செய்கின்ற சொக்கநாயகராகிய கூலிக்காரர்தெரிந்து பின்
னும் கூடையிற் கொண்டமண்ணைக் கையிலே கொட்டிவிட்டு இந்தக்க
ரையை இப்பொழுதே தாயே, சீக்கிரத்தில் அடைப்பேன் கொஞ்சமாகி
லும் இதற்கு இரங்காமல் உன்னுடைய உரிமையுள்ள வீட்டுக்குப் போ
வென்றார் என்றவாறு. (௬௰)

நீறணிபுனிதமேனி நின்மலன்விடுப்பவேகித்...... ....*
தோறிரைமுகத்தினுடன் றன்மனைபுகுதுமெல்லை.........*
கூறருந்தவத்தின்மிக்காள் கோலறையுடைக்கவஞ்சி...... ...*
மாறதிரைக்கைதன்னாற் றொழுதனள்வையைமங்கை... ...*

(இ-ள்) விபூதிதரித்த பரிசுத்தமாகிய திருமேனியையுடைய சொக்க
நாயகனனுப்பநடந்து தோல்திரைந்த முகத்தையுடைய பிட்டுவாணிச்சிய
ம்மை தன்வீட்டிற்குப் போயினாள் அப்போது சொல்லுதற்கரிய தவத்
தினால் மிகுந்த அவளுடையபங்கைச் சுவாமியடைக்க அதற்குப் பயந்து
மாறிவருகின்ற அலையாகிய கைகளால் வணங்கினாள் வையைநதியாகிய மா
து என்றவாறு. (௬௧)

சிறந்தமண்கூடைவேணித் திருமுடிக்கொட்டையாக.........*
நிறங்கிளர்கொன்றைநீழ னிறைமணலணையதாக......... ...*
வுறந்தொழின்முயற்சியாலே யுயங்கிமெய்யிளைத்தார்போல
மறைத்துலகெங்குமான வள்ளலார்பள்ளிகொண்டார்... ...*

(இ-ள்) சிறக்கப்பெற்ற மண்ணெடுக்குங்கூடை ஜடாபாரத்தையுடைய
திருமுடிக்குத் தலையணையாகவும் நிறத்தையுடைய கொன்றைமரத்தினது
நீழலிலே நிறைந்திருக்கின்ற மணலிலே மெத்தையாகவு மிகுந்த தொ
ழில்செய்யு முயற்சியாலேவருந்தித் திருமேனியிளைத்தவர்போல மறை
த்து உலகெங்குமாயிருக்கின்ற சொக்கநாயகர் துயில்கொண்டார்-எ-று

ஆங்கவர்துயிலுமெல்லை யருட்பெருவாழ்வின்மிக்கா ...*
ரோங்கியகருமஞ்செய்வா ராகியொண்பிரம்புதாங்கிப் ...*
பாங்குநின்றவனைநாடிப் படர்ந்தசோலையிலுள்ள......*
நீங்குநன்குணர்வினன்னச் சென்றனர்கணாயிலன்னோர். *

(இ-ள்) அவ்விடத்திலே சொக்கநாயகர் நித்திரைசெய்யும்போது திரு
வையுள்ள பேரின்பவாழ்விலே மிகுந்த மாணிக்கவாசகரானவர் மிகவுமு
யர்ந்தகாரியஞ் செய்பவராய் ஒளியையுடைய பிரம்பைவைத்துக்கொண்டு
பக்கத்திலே நின்றவர்களைப்பார்த்து அவரவருக்கு அளந்தக்கொடுத்தப்

பங்கிலுள்ள குற்றத்தையும் நன்மையையும் அறியுங்கோளென்று சொன்னார். அப்படியே அவர்கள் வையைநதிக் கரையின்மேற் போனார்களென்றவாறு. (௪௩)

நன்குறவடைத்தல்செய்தா ரியாவருமெனநயந்து……*
சங்கரனடைக்குநீபி தடங்கரையவர்களெய்தி……*
யெங்கணுமுயர்ந்துதாழ்ந்த திவ்விடமியார்க்குவந்த……*
பங்கிதுமொழிமினென்ன நின்றவரிவைபகர்ந்தார்……*

(இ-ள்) தன்மைபொருந்த எல்லாரும் அவரவர்பங்கை நன்றாயடைத்தார்களென்று மனமகிழ்ந்து சொக்கநாயகரடைக்கின்ற நெடியகரையிலே அவர்கள்வந்து எவ்விடமும் உயர்ந்திருக்க இவ்விடமாத்திரம் தாழ்ந்திருக்கின்றது இது யாவர்க்கு வந்தபங்கு சொல்லுங்களென்ன, அங்குநின்றவர்கள் இவைசொன்னார்களென்றவாறு. (௪௪)

பெருவளநீர்க்கூடற் பிட்டுவிற்றுணவுகொள்வா……*
ளொருமுதுமடந்தையாளாயொருவன்வந்திக்கரையெய்தி……*
யிருநிலமகிழ்ந்துகூடையுட்சொரிந்திரங்கிநிற்பன்……*
சிரமிசையெடுப்பன்மீள்வன் சிந்துவனகுதல்செய்வான்……*

(இ-ள்) பெரியவளங்கள்நீடிய மதுரைமாநகரத்திலே பிட்டினைவிற்றுச் சீவனஞ்செய்பவளாகிய ஒருகிழவி யிருக்கின்றாள் அவளுக்காளாய் ஒருத்தன் இங்கேவந்து பெருமைபொருந்திய மண்ணைவெட்டிக் கூடையிலேசொரிந்து இரக்கிநிற்பான் தலைமேலெடுப்பான் திரும்புவான் கொட்டுவான் சிரிப்பானென்றவாறு. (௪௫)

பாடுவனுடல்செய்வன் மைபயவோர்கூடைமண்ணை……*
நீடுதின்கரையிலேறச்சொரிகுவனெடிதுநிற்ப……*
னோடுவனோடிமீள்வ னொருகைமண்கரையிலேறப்……*
போடுவன்போகவென்னில்வருவன்வாவென்னிற்போவன்……*

(இ-ள்) பாடுவான், கூத்தாடுவான், மெள்ளஒருகூடைமண்ணை நீண்டு உரத்தகரையிலேறக் கொட்டுவான், நெடுநேரநிற்பான், ஓடுவான், ஓடித்திரும்புவான், ஒருகைமண் கரையிற்போகப்போடுவான், போவென்றால் வருவான், வாவென்றாற் போவானென்றவாறு (௪௬)

பிட்டினைநாசரேனையா பெரிதுநன்றென்றுகையைக்……*
கொட்டுவன்செய்கைகாணி லரிளங்குமரனேப்பா……*
னெட்டலர்க்கொன்றைநீழ னெடுந்துயில்கொள்கின்றானெங்
கட்டுளைசற்றுங்கேளானவன்றனக்காண்டியென்றார்……*

(இ-ள்) பிட்டினைச்சாப்பிடுவான் ஐயா, மிகவும் நன்றாயிருக்கிறதென்று கையைக்கொட்டுவான் அவனுடைய செய்கையைப் பார்த்தால் இளமைபொருந்திய ராஜகுமாரன்போலு மிருக்கின்றான் நெடிய மலையுடைய கொன்றைமரநிழலில் தேடும்போது நித்திரைசெய்கின்றான். எங்களுடைய சொல்லைக் கொஞ்சமுங்கேளான் அவனைக் காண்பீராக ளென்றவாறு. (௪௭)

என்றலுமவனையிங்கே கொணர்மினென் றிவருணின்ற ... *
வன்றிறலொருவன்கூற வாரியல்வல்லையோடிச் .... *
சென்றலுஞானயோகச் செழுந்துயிலொழிந்துமூன்ற ... *
துன்றியபுரங்கள்செற்றார் துண்ணெனவிழித்தெழுந்தார் *

(இ-ள்) இப்படியென்று சொன்னமாத்திரத்திலே அவனையிங்கேகொணடுவாருங்களென்று இவருக்குள்ளேயிருந்த வலியசௌரியத்தையுடைய ஒருவன்சொல்ல மிலேச்சதூதரிலொருவன் சீக்கிரத்திலோடினவுடன் அப்போது செழுமையுள்ளஞானயோக நித்திரைநீங்கித் திரிபுரங்களையுமெரித்த பரமசிவனானவர் சிக்கென்று விழித்துக்கொண்டார்- எ-று. (௪௮)

விழித்தலுங்கடிதுசென்ற வாரியன்வெருவநோக்கி .... *
மொழிக்கனல்சிந்தியந்த முன்னவன்றனையெய்த .. .. *
வழைத்தலும்வருதல்செய்யா தஞ்சிநின்றிரங்கல்கண்டு .. *
பழித்தவர்செங்கைபற்றியீர்த்தனன் பரிவிலாதான் .... *

(இ-ள்) விழித்துக்கொண்டமாத்திரத்தில் சீக்கிரத்திலே ஓடிநின்ற மிலேச்சதூதனானவன் அவனைப்பயப்படப்பார்த்துச் சொல்லாகிய நெருப்பைப்பொழிந்து அந்தஎசமானிடத்துக்கு வாவென்று அவனையழைத்தமாத்திரத்தில்வாராமல்பயந்துநின்று யிரங்குதல்கண்டுபழித்து அவருடைய சிவந்தகையைப்பிடித்திழுத்தான்பத்தியில்லாதவனென்றவாறு. (௪௯)

ஆங்கவன்கடிதிற்றள்ளி யண்ணலையெண்ணிலாத .. .. *
தீங்கினன்முன்னர்க்கொண்டுசேறலும்வெகுட்சியெய்திப் *
பாங்குநின்றவருணின்றபாவியைப்பாவிநோக்கி .... *
யீங்கெழுகுருதிசோரவடித்திடிங்கிவனையென்றான் .... *

(இ-ள்) அந்ததூதனானவன் ஆளாகவந்தகடவுளைச்சீக்கிரத்திலே அளவற்ற குற்றங்களையுடையவன்முன்னே தள்ளிக்கொண்டுபோய்ச் சேர்ந்தமாத்திரத்திலே பாவியாகிய எசமான்கோபங்கொண்டு பக்கத்திலேயிருந்தவரில் ஒருபாவியைப்பார்த்து இங்கே ரத்தமொழும்படி இவனையடிப்பாயாகவென்றானென்றவாறு. (௫௰)

கடித்தகொல்வன்கணாளன் கடித்திடன்மாறனையி ... ...*
லெடுத்தனன்முனிவரவின்னோ ரெடுத்தனர்தொழுதுசெங்கை
யடித்தனனடித்தபோதி லன்புடையரிவைபாகன் ... .. *
கொடுத்திலர்துணுக்கமெய்த மறைந்தனர்குறைவிலாதார். *

(இ-ள்) கடித்தசொலல்லைப்புடைய கொடியவன் கோபத்துடனே பிரம்பி
னைக்கையிலேயெடுத்தான் அப்போது முனிவரும்தேவரும்கையெடுத்துக்
கூப்பிவணங்கினார்கள் அவன் அடித்தான் அப்போது அன்புடைய உமா
தேவியிருக்கும் வாமபாகத்தைக்கொடாமல் அங்கிருந்தவர்களெல்லாந்
திடுக்கிடும்படி மறைந்துவிட்டார் குறைவில்லாத சொக்கநாயகரென்
றவாறு. (௫௧)

(வேறு.)

தார்மேனிமிலங்குபுயவழுதிமேலுந்தன்மனைமங்கையர்மேலு
மமைச்சர்மேலு,மார்மேலுஞ்செய்ன்றபெருஞ்சேனைமேலுமயன்
மேலுமான்மேலு மறைமேவார்மேலுந், தேர்மேல்வெம் பகன்மேலு
மதியின்மேலுஞ் சிறந்துளவிந்திரன்மேலுந்தேவர்மேலும், பார்
மேலுங்கடல்மேலுமரங்கள்மேலும் பட்டதரன்மெய்யிலடி பட்
டபோதே... ... ...*

(இ-ள்) அப்போது மாலையணிந்தபிரகாசம்பொருந்தியபுயத்தையுடை
ய பாண்டியராஜன் மேலும், அவன்பத்தினிகள்மேலும், மந்திரிகள்மே
லும், எவர்கள்மேலும், போர்யுத்தஞ்செய்யுஞ்சேனைகள்மேலும், பிரம
ன்மேலும், மகாவிஷ்ணுமேலும், முனிவர்மேலும், தேர்மேலிருக்கின்ற
சூரியன்மேலும், சந்திரன்மேலும்,சிறப்பினைப்பெற்றுள்ள தேவேந்தி
ரன்மேலும், தேவர்கள்மேலும், பூமியின்மேலும்,சமுத்திரத்தின்மேலு
ம், மரங்கள்மேலும்பட்டது பரமசிவன்மேலேபட்ட அடியென்றவாறு.

தந்தமுருவொழித்துபிறி துருவமெய்திச் சதுமுகனுஞ்சங்காழி
தரித்தமாலு,மந்தமுதற்றெரியரிதாய்வெளியேநின்றவண்ணலார்வ
டிவிலடிபட்டபோது, வெந்தவுலகங்களினுமிருந்துளோர்க ளெம்
முடலிலடியுறைத்ததென்றுகூற, மூர்த்தியெழும்பன்மொழிச் சொ
காந்தவெல்லைமோகரிக்குமெழுகடலின்முழக்கம்போலும்.....*

(இ-ள்) தங்கள்தங்கள் வடிவங்களைவிட்டு வேற்றுருவங்கொண்டு நான்
கு முகங்களையுடைய பிரமதேவனும், சங்குசக்கரந்தரித்த மகாவிஷ்ணு
வும்தேடிஅந்தமும்ஆதியுந்தெரிதற்கரிதாகி இப்போதுவெளியேநின்ற
சொக்கநாயகருடைய திருமேனியில் அடிபட்ட பொழுதிலே எந்தலோ
கத்திலிருந்துவந்தவர்களும் எங்கள்தேகத்தில்அடிபட்டதென்றுசொல்லு

முழங்குகின்ற அர்த்தச்சொற்கள் உகமுடிவு காலத்திலே சத்திக்கின்ற சத்தசமுத்திரங்களுடைய முழக்கம்போலானதென்றவாறு.

மாயையெனுங் கரும்பெரிப்புனல்மேன்மொக்குள் வண்ணமெ
னுமெழுவெண்ணிலாவண்டத்துள்ளு, மேபவகையெண்பத்துநான்கு நூ
றாயிரமாம் பலயோனியில்வற்றினுள்ளு, மாமுயிர்க்குயிராகி நிற்குந்
தன்மை பவனிதலத்தஞ்ஞானர் நிற்கும்பாதச், செய்மலர்வழுத்துதற்
கோர்கூலியாளாய்ச் சென்றுமுடிமண்சுமந்தார் தில்லைநாதர் .. *

(இ-ள்) மாயையென்று சொல்லுகின்ற கருமையுள்ள பெரியநீரின்மேலே குமிழிவடிவென்று சொல்லும் அளவில்லாத அண்டங்களுக்குள்ளே பொருந்தியிருக்கின்ற எண்பத்துநான்கு நூறாயிரம் யோனிபேதமென்னும் இவைகளினுள்ளிருக்கின்ற உயிருக்குயிராகி நிற்குந் தன்மையைப் பூவுலகத்திலே ஞானிகளறிந்து தம்முடையபாதமாகிய செந்தாமரைமலரை வணங்குதற்கு ஒருகூலியாளாகிப்போய்ச் சிரசிலேமண்சுமந்தார் தில்லைமாநகரத்திலே நிருத்தஞ்செய்கின்ற சபாநாயகரென்றவாறு.(௬௪)

(வேறு.)

மைப்புணையுந் திருமிடற்றார் மெய்யிலடியாரது ... .*
ரையருடப்பினும் வந்துபடுதலுமேயயர் வெய்தி .. .. *
புய்ப வெண்ணியாட்கொள்ளவுகந்தொருவர்க்காளாகி .. .. *
மெய்யமொழுந்தருளினரோவென்றென்று மிகநொந்து ... *

(இ-ள்.) மேகத்தையொத்த அழகிய கண்டத்தையுடைய சொக்கநாயகர் திருமேனியிலேபட்ட அடியானது திருவாதவூரிலே அவதாரஞ்செய்த மாணிக்கவாசகருடைய திருமேனியிலும்வந்துபட்டமாத்திரத்திலே அவர் ஆயாசத்தையடைந்து நான்பிழைக்கும்படி யென்னை அடிமைகொண்டருள மனமகிழ்ந்து சொக்கநாயகர் ஒருவருக்குக் கூலியாளாகி எழுந்தருளினரோவென்று மிகவுந்தமக்குள்ளே வருத்தப்பட்டனென்றவாறு.(௬௫)

தம்பெருமையறியாதத் பிறைவர்தமக்கிரங்கிக்... ... ...*
கம்பிதமுங்கண்ணீரும்வரக்கவற்சியுறும்போதில்...... ...*
வெம்பிறவிதொலைத்தார்முன் னூரியர்கள்விரைந்தோடி ... *
யெம்பிரான்திருவிளையாட்டெல்லாமங்குரைத்தார்கள் ... *

(இ-ள்.) தம்முடையபெருமை யிவ்வளவென்று அறியாத தமது கடவுளாகிய சொக்கநாயகருக்கு இரக்கமுற்று நடுக்கமும் கண்ணீரும் உண்டாகக் கவலையடைந்த பொழுதிலே வெய்யபிறவியைத்தொலைத்த மாணிக்கவாசகர்முன்னே தூதர்கள் சீக்கிரத்திலோடிவந்து தேவர்களுக்கிறைவராகிய கடவுளுடைய திருவிளையாட்டெல்லாம் சொன்னார்கள்-எ-று.

வேட்டிருக்கும்பெருங்காதல் வித்தகரித்தன்மையெலாங்.. *
கேட்டுமனந்தளர்ந்துமிகக் கிளர்த்துவிழிப்புனல்பொங்க*
வாட்டிகழுஞ்சடையண்ணன்மண்சுமந்தவிடங்கொடுபோய்க்
காட்டுமெனமொழிந்தவரோ டவ்விடநேர் கடிதெய்தி .. *

(இ-ள்) மிகுந்தஆசையால் விரும்புகின்ற மாணிக்கவாசகரானவர் இந்தச்செய்திகளனைத்தையும் கேள்விப்பட்டு மனந்தளர்ந்து மிகவுங்கண்களிலே நீர்பெருகச் சிவந்த வொளியினாற் பிரகாசிக்கின்ற ஜடாபாரத்தையுடைய சொக்கநாயகர் மண்சுமந்த இடத்தைக்கொண்டுபோய்க் காண்பியுங்களென்றுசொல்லி அவர்களுடனே அவ்விடத்திலே நேராகச் சீக்கிரத்திற்போ யென்றவாறு. (௫௭)

அழுங்கியரும்பெருநரகி லடியேனும்வீழாம....... ......*
லெழுந்தருளும்பெரியோனே யெங்குளாயென்றென்று
தொழுங்கரமுங்கண்ணீருந் துளங்கியமெய்ப்புளகமுமாய்
விழுந்துபுரண்டிவ்வாறு புலம்பினர்மெய்யன்பாளர்.. ...*

(இ-ள்) அடியேன் வருத்தப்பட்டுக் கொடுமையையுடைய பெரியநரகத்தில் வீழாமற்செய்ய எழுந்தருளிய கடவுளே நீ யெவ்விடத்திலிருக்கின்றாய் எவ்விடத்திலிருக்கின்றாயென்று தொழுகின்ற கைகளுங் கண்ணீரும் நடுக்குகின்ற மெய்யிற் புளகமுமுடையவராய்க் கீழேவிழுந்து புரண்டு இந்தப்பிரகாரம் புலம்பினார் மெய்யன்புடைய மாணிக்கவாசகரென்றவாறு. (௫௮)

நீறுபடும்பொன்மேனி நின்மலனேநெடுங்கங்கை..........*
யாறுபடுஞ்சடைமுடியாயடியவர்கட்கெளியானே.........*
மாறுபடும்புரமெரித்தாய் மாறுபடும்போதுடலிற்... ...*
கூறுபடுஞ்சிவஞானக் கொம்பினுளங்குழையாதோ.... .. *

(இ-ள்) திருநீற்றையணிந்த பொன்போன்ற திருமேனியையுடைய நின்மலனே? நெடிய கங்காநதியைத்தரித்த ஜடாமுடியையுடையவனே? அடியவர்கட்கெளியவனே? மாறுபட்டதிரிபுரத்தை எரித்தவனே? மாறுபடும்போது உன்னுடைய இடப்பாகத்திலிருக்கின்ற சிவஞானமேவடிவாகிய உமாதேவியினது மனங்குழையாதோவென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௯)

கொங்கையாண்மணிமார்பிற் குறிபிடுமவ்வீறுடைய... .. *
மங்கையாள்பெருமானைமண்சுமக்கநினைத்தானோ..........*
கங்கையாளலைக்கரத்தாந்கனாத்திலமேவாபுள்ளுருவாம்..... *
பங்கையாசனனறியாப்பணிமுடியென்றறியானோ..........*

(இ-ள்) ஸ்தனபாரங்களாலே அழகியமார்பிலே தழும்புசெய்தவிருப்பையுடைய காமாக்ஷியானவள் கடவுளை மண்சுமக்கும்படி நினைத்தாளோ? கங்கையானவள் அலையாகிய கையினாலே அந்தமண்ணைக் கரைக்கவில்லையோ? அன்னவடிவாகிய தாமரை மலரிலிருக்கின்ற பிரமனாலுமறியப்படாத சர்ப்பத்தையணிந்த சிரசென்றறியானோவென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௯௰)

பிரமனுடன்றிருமாலும் பிறப்பகலப்பல்காலும்... ... .. *
பரிவினுடன்றருமலரோ பத்தரிநிம்பச்சிலையோ... ... ...*
புரிதருசெஞ்சடையோதற் புதுமதியோவாயிரவாய்... ...*
வரியரவின்பலபடமோ மண்சுமக்குஞ்சும்மாடு............*

(இ-ள்) பிரமதேவனுடனே மகாவிஷ்ணுவுந் தம்முடைய பிறவிநீங்கப் பலதரமும் அன்பினுடனே சாத்துகின்றமலரோ? அல்லது அடியவர்கள் சாத்துகின்ற பச்சிலையோ? மூன்றுக்கையுடைய சிவந்தஜடையோ? நல்ல புதுமையையுடைய மதியோ? ஆயிரவ்வாயுள்ள நெடிய சர்ப்பத்தினுடைய அனேகம் படங்களோ? நீயமைத்த மண்ணைச்சுமக்குஞ் சும்மாடென்றவாறு. (௯௧)

கலையறியும்புகழ்வையைக் கரைதிருவம்பலமாக..........*
வலையெறியும்புனலோசை யந்தரதுந்துமியாகத்...... .. *
தலைவனடங்கண்டார்களரவமெனுந்தவமுனியுங் ....*
கொலைதவிரும்புலியென்னுங் குலமுனியுமானாரோ .. ...*

(இ-ள்) தமிழ்ப்பாடலின் தன்மையையறிந்த கீர்த்தியையுடைய வையைநதிக்கரையே அழகிய வெள்ளியம்பலமாக அலையைவீசுகின்ற நீரினுடைய சத்தமே தேவதுந்துமியாக கடவுளுடைய நிருத்தத்தைக் கண்டவர்கள் பாம்புவடிவையுடைய தவமுனியாகிய பதஞ்சலியும் கொலைதவிர்ந்த புலியென்று சொல்லப்படுகின்ற உயர்ந்த வியாக்கிரபாதருமானாரோ வென்றவாறு. (௯௨)

மீனேறுங்கொடித்தென்னன் விழிக்கேறவினைதுரகந் ...*
தானேறவதுகண்டு தருங்கலைபொற்செண்டேறத்.........*
தேனேறுமலர்க்கொன்றைத் திருமுடிமேன்மண்ணேற...*
யானேறுஞ்சிவபதமு மெனக்கேறவின்றுறு ....*

(இ-ள்) மீனெறிய கொடியையுடைய பாண்டியனது கண்ணுக்கு நேராகவினைந்து நடக்கின்றகுதிரையேறுவதுகண்டு அவன்கொடுக்கும்பீதாம்பரமானது குதிரைச்சவுக்கிலேறத் தேனேறியமலர்ந்தகொன்றைமாலிகையைத்தரித்த அழகிய சிரசின்மேல் மண்கூடையேறவிருந்தபடியால்

யானேறுகின்ற சிவபதமும் எனக்கேற இனிமையில்லாததாயிருந்ததென் றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௩)

பொன்னுலகத்துள்ளோரும் புரந்தரனுந்திருமாலும்...... *
மன்னுமறைக்குரியோனும் வழியடிமைத்தொழில்செய்ய *
வன்னைதவக்காளாகி யணிவையையடைத்தடியன்...... ...*
டென்னையருட் பணிகொள்ள விலைசந்தனையோவிறையோனே.

(இ-ள்) தெய்வலோகத்திலுள்ள தேவர்களும், தேவேந்திரனும், மகாவிஷ்ணுவும், நிலைபெற்ற தவத்திற்குரிய பிரமதேவனும், வழிவழியாக அடிமைத்தொழில்செய்ய பிட்டுவாணிச்சியம்மைக்குக் கூலியாளாய் அழகிய வையைநதியை அடைத்து அடிபட்டு என்னைக் கிருபையையுடைய பணிகொள்ளச் சம்மதித்தனையோ, இறைவனேயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௪)

கட்டுமணித்துணிச்சீரைக் கச்சையுமத்திருத்தோளிற் ..... *
கொட்டுமுடித்தலைமீது கவித்தவொருகூடையுமாய்ப்...... *
பிட்டிடுநற்றவமுடையாள் பின்புவருந்திருக்கோல... ... *
மிட்டமுறத்தொழும்படிநான் கண்டிலேனிறையோனே... *

(இ-ள்) அரையிற்கட்டுகின்ற துண்டாய்க்கிழித்த துணியும் கச்சையும் அந்தத்திருத்தோளின்மேல் மண்வெட்டியும், சிரசின்மீதும்மண் கவிழ்த்துக்கொள்ளுகின்ற ஒருகூடையுமாய்ப் பிட்டினைத் தருகின்ற நல்ல தவமுடைய அம்மையினது பின்னே வருகின்ற அழகிய கோலத்தை அன்புபொருந்தத்தொழும்படி நான் காணவில்லையிறைவனேயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௫)

தாருருஞ்சடைமுடியாய் தவம்பெருகமுயன்றவர்க... ... *
ணீருரும்புகழ்வையை நெடுங்கரைமேனின்றாரோ .... *
சீருருங்கனகமுடித்தென்னவனோமதுரையனும்........ *
பேரூரிலிருப்பவரோ பிட்டமுதிட்டருள்வாரோ......... *

(இ-ள்) கொன்றைமாலிகையைத்தரித்த ஜடாமுடியையுடைய சொக்கநாயகரே? நீர் கூலியாளாய்வந்த திருவுருவைக்காண மிகவும் தவத்தைமுயன்று செய்தவர்கள் வெள்ளமோதுகின்ற கீர்த்திமிகுந்த வையைநதிக்கரையின்மேல் நின்றவர்களோ? சிறப்புமிகுந்த பொற்கிரீடத்தையுடைய பாண்டியராஜனோ? பெரியமதுரைமாநகரிலிருப்பவரோ? பிட்டமுதிட்டருளிய செம்மனச்செல்வியோவென்றார்மாணிக்கவாசகரென்றவாறு. (௬௬)

பொன்மௌலித்தலைமீது புண்ணியர்மண்சுமந்தேறுங்... *
கொன்மலியுங்கோலமையுங்குளிர்வையைப்பேராறுங்..... *

கன்மமெனும்பகைபோகக் கண்ணுதல்வெம்பரியேறத் ... *
தென்மதுரைமாநகரு மல்லவோசிவலோகம் .... *

(இ-ள்) பொன்னினாற்செய்த கிரீடத்தையணிந்த சிரசின்மேலே புண்ணியராகிய சொக்கநாயகர் மண்ணைச்சுமந்துகொண் டேறுகின்ற பெருமைமிகுந்த கோவிலுள்ளதபங்குநிலமும்,குளிர்ச்சிபொருந்தியவைகையென்னும் பெயரையுடைய நதியும், கன்மமலமென்னும் பகையானது ஓடிப்போகப் பரமசிவன் வெவ்விய குதிரையிலேறுகின்ற அழகிய மதுரைமாநகரமும், அல்லவோ சிவலோகம்——எ-று. (௪௭)

இன்னவகைபன்புடையா ரிரங்கினராயிடைவைகைத் ...... *
துன்னுதிரைப்பேராறுந் தொலையவடிந்ததுபின்னர்த் ------... *
தென்னவனுஞ்சிவன்செயலா மெனத்தெளிந் துவாதவூர் .. *
மன்னவர்தம்பால்வந்து வணங்கியிதுகூறுவான் .... *

(இ-ள்) அவ்விடத்திலே இந்தப்பிரகாரம் அன்பையுடைய மாணிக்கவாசகர் இரக்கமுற்றிருந்தனர்,நெருங்கிய அலைகளையுடைய பெரியவைகைநதியும் சீக்கிரத்தில்வடிந்தது,பின்பு பாண்டியராஜனும் இவையெல்லாம் சிவன்செயலாமென்று தெளிந்து திருவாதவூரர்க் கரசராகிய மாணிக்கவாசகரிடத்தில்வந்து வணக்கஞ்செய்து இதனைச்சொல்லுவானென்றவாறு.

அந்தரர்தம்பதியினிழிந் தருள்புனைமாத்தியர்குலத்து ......*
வந்தருளித்தமியேற்கு மந்திரியாய்மகிழ்வெய்தி .... *
யெந்தைவயப்பரியேறல்காட்டியெனக்கொழியாத .... *
பந்தமறத்திருவுள்ளம் பற்றினைநற்றவத்தோனே ....*

(இ-ள்) தேவர்கள் வசிக்கின்ற பொன்னகரத்தினின்றிழிந்து கிருபையைத்தரித்த ஆமாத்தியர் குலத்திலேவந்து திருவவதாரஞ் செய்து தனியேனாகிய அடியேனுக்கும் மந்திரியாகி மனமகிழ்ச்சியடைந்து எமது பிதாவாகிய சொக்கநாயகர் வெற்றியையுடைய குதிரையேறி வருவதையெனக்குக்காட்டி எப்போதும் நீங்காத பாசத்தளையறும்படி திருவுளம் பற்றினீர் நல்தவத்தையுடைய மாணிக்கவாசகரேயென்றான் பாண்டியராஜன்எ-று. (௪௮)

கருமாளத்திருமேனிகாட்டினனென் றனைராமற் .... *
திருமாலும்பரவரியாந் தேவருடன்பரியேறி .... *
வருமாயர்குழலினை ஸழுக்காடையண்டர்தொழும் ....*
பெருமானுக்களித்தேனென் பிழைசெய்தேன்பெரியோனே. *

(இ-ள்) என்னுடைய பிறவியாளத் திருமேனிகொண்டு காண்பித்தாரென்றறிந்து கொள்ளாமல் மகாவிஷ்ணுவாலும் வணங்குதற்கரிய சொக்க

நாயகர் தேவர்களுடனே குதிரையேறிக்கொண்டுவந்த அந்தமாலையினுடைய குழகையினாலே அழுக்குவஸ்திரத்தைத்தேவர்பணிகின்ற கடவுளுக்குக் கொடுத்தேன் என்னபிழையினைச்செய்தேன் பெரியோமேனயென்றார் பாண்டியராஜன் என்றவாறு. (௭௰)

அப்பணிசெஞ்சடையானை யரும்பரிமேலாளாக்கு........*
மெய்ப்பொருளென்றுணராமல் வெய்யவினைப்பொருள்வே
ண்டிச், செப்பருமித்தருகண்மை செய்வித்தேன்சிறுமையு
வே, னெப்பிழையும்பொறுத்தருள்வாயானரகிற்புகுதாமல்*

(இ-ள்) கங்கையைத்தரித்த சிவந்தசடையையுடைய கடவுளை அருமையையுடைய குதிரைக்காரராக்கு மெய்மை யுண்மைப்பொருளென்று தெரிந்துகொள்ளாமல் தீவினைக்குக்காரணமாகிய திரவியத்தை விரும்பிச் சொல்லுதற்கரிய கொடுமைசெய்வித்தேன் சிறுமையுள்ளவனாகிய என்னுடைய எந்தப்பிழையும்பொறுத்தருள்வாய் அடியேன்நரகத்திற்புகாமலென்றவாறு. (௭௧)

தாநாகமணிந்தபிரான்றுங்கமிகும்பரியேறிப்... .... *
பூநாறுஞ்சடைமேன்மண்சுமந்தபுகழ்போதாதோ..........*
யானாளுநின்பணியேசெய்தொழுகவிவ்வுலகந் - ... .*
தானாளவேண்டுமெனவென்றுரைத்தான்றமிழ்மாறன் .. .. *

(இ-ள்) பரிசுத்தம்பொருந்திய சர்ப்பத்தையணிந்த சொக்கநாயகரானவர் உயர்வுமிகுந்த குதிரையின்மேலேறிப் பூமணம்வீசுகிற ஜடாபாரத்தின்மேல் மண்சுமந்த கீர்த்திப்போதாதோ ? நான்நாள்தோறும் உம்முடைய பணிவிடையேசெய்துவர நீர் இனி இவ்வுலகத்தை யாளவேண்டுமென்று வேண்டிக்கொண்டான் தமிழைவளர்க்கின்ற பாண்டியராஜனென்றவாறு. (௭௨)

(வேறு.)

வன்றிறன்மன்னனிவ்வாறுரைத்தலும்வாதவூரர்......... ...*
தென்றிசைபுரக்குநீதித்தென்னவன்றன்னைநோக்கிப்......*
பின்றிகழ்சடையோன்மன்னும்பெருந்துறைநகரிலேக ...*
வின்றெனைவிடுப்பதேமற்றிவ்வுலகளிப்பதென்றார் ......*

(இ-ள்) வலியசௌரியத்தையுடைய பாண்டியராஜன் இந்தப்பிரகாரஞ் சொன்னமாத்திரத்தில் திருவாதவூரர் தென்றிசையை ரக்ஷிக்கின்ற நீதியையுடைய அவ்வரசனைப் பார்த்துப் பின்னே பிரகாசிக்கின்ற சடையையுடைய கடவுள் நிலைபெற்றிருக்கின்ற திருப்பெருந் துறைக்குப்

போகும்படி இன்றுஎன்னை யனுப்புவதே எனக்கு இந்தவுலகத்தை யாளும்படிக்குக் கொடுப்பதென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (எரு)

தென்புலத்தலைவன் றானுஞ் சிந்தையினொந் தழுங்கின்றே...*
னன்பருக்கரசர்வாழ்வி லாசையிங்குளதோவென்று... ...*
மென்பதத்திறைஞ்சியையா வேண்டியசெய்கவென்று ..*
தன்புகழ்க்கூடல் மூதூர் புகுந்தனன்றானை சூழ ....*

(இ-ள்) தென்றிசைமன்னனாகிய பாண்டியனும் அப்படிசொல்லக்கேட்டு மனத்திலே நொந்துகொண்டு நானேனாகிய சிவனுடைய அடியாருக்கு ராஜசம்பத்திலே ஆசையுண்டோவென்று சொல்லி மாணிக்க வாசகருடைய திருவாகிய பாதத்திலேவணங்கி ஐயனே மனதுக்குவேண்டியபடி செய்யக்கடவீரென்று செலவுகொடுத்துத் தன்னுடைய கீர்த்தியிருந்த மதுராபுரியிற் புகுந்தான் சேனைகள்சூழ என்றவாறு. (எசு)

சற்றவத்தொழில்செய்யாத தானைமன்போனபின்ன......*
ரற்றவர்க்குற்றசோதி யருட்பெருவாழ்வுவேண்டிக்........*
கொற்றவர்க்குற்றகோலங் குறையெனநீசதுமேலா......*
நற்றவக்கோலங்கொண்டார் நப்பருக்கண்டமிக்கார் .....*

(இ-ள்) சற்றாகிலும் தவத்தொழிலைச்செய்யாத சேனைகளையுடையபாண்டியராஜன் போனபின்பு ஆசையற்றவர்களுக்குற்ற பிரகாசிக்கும் கடவுளுடையபேரின்பவாழ்வை விரும்பி அவ்வரசனுக்காகக் கொண்டிருந்தவேடத்தைக்குறையென்று நீக்கி மேலாகிய நல்லதவவேடங்கொண்டார் பரமசிவனுக்கன்புமிகுந்த மாணிக்கவாசகரென்றவாறு. (எஎ)

அத்தனையாலவாயி லண்ணலைவணங்கியற்த.... ....*
லைமத்திகழ்சோலைநீடு மதுரையம்பதியைநீக்கி...... .. ...*
வித்தகர்தம்மையாண்ட மேனிகண்டிறைஞ்சவேண்டும் . *
பித்திலர்கடிதுசென்றார் பெருந்துறைபொருந்தவெண்ணி.

(இ-ள்) அத்தனாய் மதுரையிலிருக்குஞ் சொக்கநாயகரைவணங்கி, மேகங்கள் தவழ்கின்ற பிரகாசமிகுந்த சோலைநீடிய அந்த மதுராபுரத்தைவிட்டுக் கடவுள் தம்மையாண்ட திருமேனியைக்கண்டு வணங்கவேண்டுமென்று திருப்பெருந்துறைக்குப்போக நினைத்துப் பித்தங்கொண்டவராய்ச் சீக்கிரத்திற்போனார் மாணிக்கவாசகர் என்றவாறு. (எஅ)

மிடைகெடவைத்தபாத வித்தகருணைநோக்கி... ....*
நடையிடுமெல்லைதன்னி னன்மணவிளைவுகாற்றுந்... ...*
தடைபடுகல்லைநாடுங் கபிலையுத்ததும்பிநின்று.......... *
மடையினையுடைக்குநீரு மாயினர்வாதவூரர்...............*

(இ-ள்) அஞ்ஞானம்நீங்கத் திருவடிவைத்த கடவுளுடைய் திருப்பெருந்துறையைப்பார்த்து நடைகொள்ளுஞ்சமயத்தில் மனோவேகமும்வாயுவேகமும் தடைப்பட்டிருக்கின்ற இளங்கன்றை நாடிப்போகிற கபிலைப்பசுவும் நிறைந்துநின்று மடையையுடைக்கும் நீரும்போலாயினர் திருவாதவூரரென்றவாறு. (எஎ)

கண்ணுழையாதகானும்பதிகளுங்கடிதுநீங்கி..................*
யெண்ணருமுனிவர்மேவுமெழிற்பெருந்துறையிலெய்திப்*
புண்ணியவிளைத்தாருமுன்புபோலிருந்தபோதில்... ... *
விண்ணவரதிபன்பொற்றாள்வீழ்ந்திறைஞ்சிதுசொல்வார்*

(இ-ள்) கண்களாலும் நுழையப்படாத காடுகளும் ஊர்களுஞ்சீக்கிரத்திலே கடந்துபோய் அளவற்றமுனிவர்கள் வசிக்கின்ற அழகுநிறைந்த திருப்பெருந்துறைக்குப்போய்ப் புண்ணியத்தையுடைய முனிவர்களுமு முன்புபோலிருந்தபோதில்தேவர்களுக்கதிபனாகிய பரமசிவனுடைய திருவடியின்மேலேவீழ்ந்து வணங்கி யிதைச்சொல்வார் மாணிக்கவாசகரென்றவாறு. (எஅ)

தீண்டுதற்கரியமார்பிற்சேயிழைதனத்தினாலு... ... .*
மீண்டொருமாற்றினாலுமெய்தியதழும்புபோற்றி... .....*
வேண்டியவடிவமாகிவெம்பரிமேற்கொண்டெம்மை... ...*
யாண்டருள்செய்யவந்தவண்ணலேபோற்றிபோற்றி... ...*

(இ-ள்) முன்னாலே சத்தபுரியிலும் விசேடமாகிய காஞ்சிமாநகரத்திலேகம்பையாற்றிற் காமாக்ஷி பூசைசெய்யும்போது அந்தப்பூசையின்உறுதியைச்சோதிக்க அந்நதியிலே சர்வதீர்த்தங்களையும் வரச்செய்து அது ஆகாசமளாவி வருகிறபோது சிவபூசைக்கு விரோதமாய்வருகிறதென்று பயந்து தழுவிக்கொள்ளுதலால் ஒருவராலுந் தீண்டுதற்கரிய மார்பிலே அந்தகாமாக்ஷியினுடைய ஸ்தனபாரங்களாலும் இங்கே ஒருமாற்றினாலும் அடைந்த தழும்பையுடையவனேபோற்றி வேண்டியவடிவங்கொள்பவனாகிய வெவ்விய குதிரையின்மேலேறிக்கொண்டு எங்களை அடிமைகொண்டு அருள்செய்யவந்த ஐயனேபோற்றிபோற்றி யென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (எகூ)

அண்டருக்கரியாய்போற்றி யடியவர்க்கெளியாய்போற்றி *
வண்டமிழ் பாண்டிநாடுவாழ மண்சுமந்தாய்போற்றி ....*
கண்டவக்கினியபேணிகாட்டியென் சென்னிமீது .. ..*
முண்டகத்திருத்தாள்வைத்த முத்தனேபோற்றிபோற்றி ...*

(இ-ள்) தேவர்களுக்கரியவனேபோற்றி, அடியவர்களுக்கெளியவனே போற்றி, வளத்தையுடைய தமிழ்மிகுந்த பாண்டியதேசம்வாழும்படிம ண்சுமந்தவனேபோற்றி, கண்ணுக்கு இனியதிருவுருவைக்காட்டி என்சிர சின்மேலே தாமரைமலர்போன்ற திருவடிகளை வைத்தமுத்தனேபோற்றி போற்றியென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (அய)

போற்றியென்றின்னவாறு புகன்றவர்முடிமேற்செங்கை... *
யேற்றியக்கினியகூறி யெழுகென வெழுந்தபின்னர்... .. *
நீறணையும்புனைந்த ஞானநிறைப்ருட்பாரினைநல்கி......... *
வீற்றிருந்தன்பர்கூட்டம்விளங்கினர்களங்கமில்லார்... ... *

(இ-ள்) போற்றியென்று இந்தப்பிரகாரந்துதித்த மாணிக்கவாசகரது சிரசின்மேலே சிவந்தகையைவைத்து இன்சொற்சொல்லி எழுந்திருவெ ன்றுசொல்ல எழுந்தபின் புனிபூதியுந்தரித்து அறிவுநிறைந்தகிருபாநோ க்கஞ்செய்து வீற்றிருந்து அன்புடைய அடியார்கள் கூட்டத்தில்வி ளங்கியிருந்தார் களங்கரகிதராகியகடவுளென்றவாறு. (அக)

அந்தமுமுதலுமில்லாவடியவர்தம்மைநாடி...... ...*
வந்துளகருமமெல்லாமுடித்தனமகிழ்ச்சிகூர... ... *
நந்திகழ்வடிவங்காணவேண்டி நற்கயிலையுள்ளார்..... *
சிந்தனைசெய்தார்வல்லையாண்டுநாஞ்சேறல்வேண்டும் *

(இ-ள்) முடிவுமுதலுமில்லாத அடியவர்களைக்குறித்து வந்தகாரியமெ ல்லாம் முடித்தனம், மனமகிழ்ச்சியுண்டாக நம்முடைய ஒளியையுடைய திருவுருவைத் தெரிசிக்கவேண்டுமென்று நல்லகயிலாசகிரியி லிருக்கின்ற வர்கள் நினைவுகொண்டார்கள் சீக்கிரத்தில் அவ்விடத்துலேநாம் போகவே ண்டுமென்றார் பரமசிவனென்றவாறு. (அஉ)

வாழ்ந்திருமின்னியாருமேகுவமென்னவந்து...... ......*
சூழ்ந்தருளுருவாமன்பர்தோத்திரம்பலவுஞ்சொல்லித்..... *
தாழ்ந்தெதிரிறைஞ்சியையாதரிப்பரிதென்னமண்மேல்... *
வீழ்ந்தயர்ந்தழுதாரெம்மை விடுதியோவென்றுநொந்தார் *

(இ-ள்) நீங்களிங்கே இன்பமுடனேவாழ்ந்து கொண்டிருங்கோள் நா ம் செல்குவோமென்று சொல்லவே அப்போது வந்து சுற்றிக்கொண்டு கிருபாவடிவத்தையுடைய அடியவர்கள் அனேகந்துதிகள்சொல்லி வண ங்கி ஐயனே? இனியாங்கள்தரிக்கிறது அருமையென்று பூமியில்வீழ்ந்து ஆயாசங்கொண்டு அழுதனர் எங்களைவிட்டு விடுகின்றையோ வென்று நொந்தார்கள் என்றவாறு. (அங)

பரிந்தழுமடியார்தம்மேற் பரமனுமன்புபூண்டு...... ...*
வருந்துவதொழிமினிந்த மணமலிகுருந்தநீழற்.......... ...*
பொருந்தியதெய்வபீடம்பொலிவொடுமுயிற்றிமீதே... *
திருந்தியமறையுந்தேடுநம்பதமாகச்செய்து ....*

(இ-ள்) அன்புகொண்டு அழுகின்ற அடியார்மேற் பரமசிவனும் அன்புவைத்து வருத்தப்படுவதை நீக்குங்கள் இந்தவாசநிறைந்த குருந்த நிழலிலே பொருந்திய தெய்வபீடமொன்று பிரகாசத்துடனேசெய்து அதன்மேல்திருத்தமாகிய வேதங்களும் தேடுகின்ற நம்முடைய திருவடிகளைச்செய்மெதன்றவாறு. (௮௪)

தாங்கருமரந்தைநீங்கியாமெனுந்தன்மைகண்டு.. .... *
நீங்கருமன்பினுமேலறித்தனுமயந்திறைஞ்சி... ... ...*
ஈங்கருண்மனத்தமெல்லாமமர்ந்திருமொருநாளித்தத்......*
தீங்ககல்பொய்கைபூடேசெழுந்தழல்வந்துதோன்றும்... *

(இ-ள்) தாங்குதற்கரியதுன்பம்நீங்கி நாமென்கிற தன்மையையறிந்து நீங்குதற்கரிய அன்பினுமேல நாள்தோறும் மகிழ்ந்து வணங்கி இவ்விடத்திலே கிருபைமிகுந்த மனத்தையுடைய அடியார்களெல்லாம் விரும்பியிருங்கோள், அப்படியிருக்குநாளில ஒருநாள் இந்தத் தீயில்லாதபொய்கையினிடத்திலேசெழுமையுள்ள அக்கினிவந்துதோன்றுமென்றவாறு.

எழுந்தழல்விளைந்தபோதில்யாவருந்தடத்தினூடு...... ...*
விழுந்துபின்னெய்திநம்பால்விடுகநுங்கவற்சியென்று... *
தொழுந்தவமியற்றுமன்பர்சூழ்ந்துபின்செல்லமெல்லச் *
செழுந்திகழ்கயிலைநாடிச்சென்றனர்தில்லைநாதர்...... ...*

(இ-ள்) அக்கினியெழுந்து விளைந்த மாத்திரத்திலே எல்லாரும் தடாகத்திலிடத்திலேவிழுந்துபின்புநம்மிடத்திலேவந்து உங்களுடையகவலையைவிடுங்கோளென்றுவணங்கத்தக்கதவத்தைச்செய்யும்அன்பர்கள்சூழ்ந்துகொண்டுபின்னேவரமெள்ளசெழுமையுள்ளபிரகாசத்தையுடைய கயிலாசத்தைநாடிஎழுந்தருளினார்சிதம்பரத்திலிருக்கின்றசபாநாயகர்-எ-று.

நீங்கருமன்பரொல்லாநில்லுமினென்றுகூற... ... ... *
வாங்கவரிறைஞ்சியெத்நாளைவதிற்காண்பதென்று.. ...... *
தாங்கருமயக்கமெய்தித்தாயகன்மகவுபோலப்... ... .*
பூங்கழல்வணங்கிநின்றார்போயினர்மாலயவல்லார்...... ...*

(இ-ள்) நீங்குதற்கரிய அன்பர்களெவரும் நில்லுங்கோளென்று சொல்ல, அங்கே அவர்கள்வணங்கி, இனிஎந்தநாளிலே ஐயா, உம்மைக்கா